பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 16 செவ்வாய்க்கிழமை (30.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## தேர்தல் அரசியலால் திசை மாற வேண்டாம்

### தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் நீண்ட கால அபிலாசைகள் நோக்கிய பயணம் பல இழப்புக்களினூடாகவும் தியாகங்களினூடாகவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதிலே தன்னலமற்ற முகம் தெரியாத பலரின் பாரிய பங்களிப்புக்கள் இருக்கின்றன.

இந்த நிலையிலே இன்று தேர்தல் அரசியலினால் கட்சிகள் தமக்கிடையேயும் தமக்குள்ளேயும் குழுக்களாகப் பிரிந்து நின்று அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடன் பேசிக் கொள்வது எமது நீண்டகால அபிலாசைகள் நோக்கிய பயணத்திற்கு ஆரோக்கியமானதாக அமையாது என தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

தமிழ்மக்கள் பேரவையினால் நேற்றைய தினம் வெளியிடப்பட்ட விசேட அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 23

## தமிழருக்கு எதிராக யுத்தம் நடத்தவில்லை

### பயங்கரவாதத்தை ஒழிக்கவே போர் இடம்பெற்றது - மகிந்த



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிராக நான் யுத்தத்தை நடத்தவில்லை. பயங்கரவாதத்தை ஒழிக்கவே நான் யுத்தத்தை நடத்தினேன் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் முஸ்லிம் சம்மேளனத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், 23

### ஹெரோயினுடன் வவுனியாவில் இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியாவில் இளைஞன் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் சிலர் போதைப் பொருட்களுடன் நட 23

தரம் 5
மாணவர்களுக்கான
புலமைப்பரிசில்
மற்றும்
க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான
தகவல் தொடர்பாடல்
தொழில்நுட்பவியல்
வினாத்தாள்கள்
உள்ளே

## கிணற்றை ஆழப்படுத்த இறங்கிய ஒருவர் உயிரிழப்பு

### மற்றொருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி



(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பில் கிணறு ஆழப்படுத்த இறங்கிய ஒருவர் 23

## 108 நாட்களின் பின் பாடசாலைகள் திறப்பு



(யாழ்ப்பாணம்)

கோவிட் - 19 தொற்று வைரஸ பரவல் காரணமாக, மூடப்பட்டிருந்த அனைத்துப் பாடசாலைகளும் நேற்றைய தினம் முதல் கட்டமாக 108 நாட்களுக்குப் பின் திறக்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாக ஊழியர்கள் மாத்திரம் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும் என கல்வி அமைச்சு 23

### முக்கிய முடிவுகளை எடுக்க

## தேர்தல்கள் ஆணைக்குழு இன்று காலை கூடுகின்றது

23ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ஒருவருக்கு கொரோனா தொற்று

(வவுனியா)

வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பூவரசங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது 23

### இராணுவ மயமாக்கியதைத் தவிர

## அரசு வேறு எதையும் செய்யவில்லை - பாலித

(கொழும்பு)

புதிய அரசாங்கம் பதவியேற்று சுமார் ஏழு மாதங்கள் கடந்திருக்கின்றன. எனினும் முழு நாட்டையும் இராணுவ மயமாக்கியதைத் தவிர 23

### 20 வயது யுவதி

## வடமராட்சியில் உயிரிழப்பு



(கரணவாய்)

வடமராட்சி கம்பர்மலை பாரதி சனசமூக நிலை 23

## முகக் கவசம் அணியாத ஆயிரத்து 214 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

18ம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### கலைமாணித் தேர்வு பகுதி II -2016 (வெளிவாரி)
### (இறுதிச் சந்தர்ப்பம்)

ஏற்கனவே திட்டமிடப்பட்டு நாட்டில் ஏற்பட்ட தொற்று நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த மேற்படி பரீட்சையானது யூலை மாதம் 13ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 08.07.2020 (புதன்கிழமை) தொடக்கம் 10.07.2020 வெள்ளிக்கிழமை வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
29.06.2020

(C-9795)

## அந்தியேட்டி சபீண்டீகரண அழைப்பு



நிகழும் சார்வரி வருஷம் வைகாசி மாதம் 19ம் நாள் ( 01.06.2020 )
திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயார்.

அமரர்
### சிவப்பிரகாசம் பரமேஸ்வரி

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகளான
அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் ஆனி மாதம் 17ம் நாள்
( 01.07.2020 ) புதன்கிழமை அதிகாலை 3.00 மணியளவில்
எமது இல்லத்தில் இடம்பெற்று காலை 6.00 மணிக்கு
கந்தவன சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும்.
தொடர்ந்து காலை 9.00 மணியளவில்
சபீண்டீகரண கிரியைகள் நடைபெற்று,
பகல் 12.00 மணியளவில் மதிய போசனம் இடம்பெறும்.
மேற்படி கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம
சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

( C-9799 )

" துவாரகபுரி "
கந்தவனக் கோவிலடி, பொலிகண்டி.

தகவல்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திரு. **இராஜதுரை கார்த்தீபன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்
### கந்தவனம் இராஜதுரை

அவர்கள் 28.06.2020 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

தோற்றம்
14.12.1944

மறைவு
28.06.2020

பிரிவுத் துயருடன்....
பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-9797 )

## பருத்தித்துறை நகரசபை
## பெறுகை அறிவித்தல் - சபை நிதி 2020

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை,பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொதியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆந் திகதிய 04/2016 (i) இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி வடமாகாண எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட பெறுகைதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையில் காட்டியபடி வீதிப் புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்:- 021-226-3213) மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி 30.06.2020ந் திகதி தொடக்கம் 2020.07.13 ந் திகதி பி.ப.15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா 2000/= இனைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
7. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,பருத்தித்துறை நகரசபை,பருத்தித்துறை எனும் முகவரிக்கு 2020.07.14 ஆந் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.
8. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து எழுபத்தியேழு (77) நாட்கள் (13.10.2020) வரையும் செல்லுபடியாகும்.
9. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2020. 07.10 ந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.
10. பெறுகை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக் குழுவின் தலைவருக்கே உண்டு.
11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு ரூபா. | செல்லுபடியாகும் காலம் |
| 1 | பிள்ளையார் கோவில் வீதி 1ம் ஒழுங்கை (தார்), எல்லை வீதி 5ம் ஒழுங்கை (தார்), தும்பளை வீதி 7ம் ஒழுங்கை (தார்) | 2.42 Mn | 45 நாட்கள் | சபை நிதி 2020 | C7/C8 | 24500.00 | 13.10.2020 |
| 2 | கல்லூரி வீதி வாய்க்கால் (கொங்கிறீட்) | 2.00 Mn | 60 நாட்கள் | சபை நிதி 2020 | C9/C8 | 20000.00 | 13.10.2020 |
| 3 | தம்புருவளை பிள்ளையார் கோவில் வீதி (தார்) | 2.87 Mn | 45 நாட்கள் | சபை நிதி 2020 | C7/C8 | 29000.00 | 13.10.2020 |
| 4 | பெருந்தெரு வெள்ள வாய்க்காலும்தட்டாதெரு தார் வீதியும், மாலந்தெணி முருகன் தார் வீதி, பருத்தித்துறை வீதி 15ம் ஒழுங்கை (தார்) | 2.28 Mn | 45 நாட்கள் | சபை நிதி 2020 | C7/C8 | 23000.00 | 13.10.2020 |
| 5 | அலுவலக பதிவேட்டு அறைக்கான ஒருபக்க அலுமாரி அமைத்தல் | 0.81 Mn | 30 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2019 | C9/C8 | 8500.00 | 13.10.2020 |

திரு. யோ.இருதயராஜா
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை - 2020.06.30

(C-9794)


## யாழ்ப்பாண மாவட்டத்தில் சஜித் ........ 01.07.2020 முதல் 03.07.2020 வரை





### மாற்றத்திற்கான முயற்சி மற்றுமொரு புரட்சி
### ஐக்கிய மக்கள் சக்தி ( SJB )

**Hon. Sajith Premadasa Meeting Schedule : Jaffna District**

| திகதி | நேரம் | தேர்தல் தொகுதி |
|---|---|---|
| 01.07.2020 | pm 2.00-2.45 | சாவகச்சேரி |
| | pm 3.30-4.15 | நல்லூர், யாழ்ப்பாணம் |
| | pm 4.30-5.15 | கோப்பாய் |
| | pm 5.30-5.45 | தாவடி |
| | pm 6.30-8.30 | வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் சந்திப்பு |
| 02.07.2020 | Morning | மதகுருமார் சந்திப்பு |
| | am 8.45-9.30 | வட்டுக்கோட்டை |
| | am 9.45-10.30 | மானிப்பாய் |
| | am 10.45-11.00 | சாவற்காடு |
| | am 11.30-12.15 | காங்கேசன்துறை |
| | pm 2.15-3.00 | உடுப்பிட்டி |
| | pm 3.10-3.20 | ராஜகிராமம், நெல்லியடி |
| | pm 3.30-4.15 | பருத்தித்துறை |
| | pm 5.00-5.45 | ஊர்காவற்துறை |
| | pm 6.30-8.30 | வர்த்தகர்கள் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு |
| 03.07.2020 | am 9.00-9.45 | கிளிநொச்சி |

யாழ். மாவட்ட தலைமை வேட்பாளர்
**வேலாயுதம் கணேஸ்வரன்**
X 10



ஐக்கிய மக்கள் சக்தி
**சஜித் பிரேமதாஸ**

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

வீழ்ந்து கிடக்கும் மக்களை நிமிர வைப்போம். அனைவர் முகத்திலும் அச்சம் தவிர்ப்போம்.
நல்லவை செய்வோம். நம் மக்களை முன்னேற்றுவோம். (008 )

# அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலை போனவர்களால்

# கடந்த 11 வருடங்களில் எதைச் சாதிக்க முடிந்தது?

## விலைபோகாத-துணிந்த-ஆற்றல்மிக்க தலைமையே எமக்குத் தேவை

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வேண்டுகோள்

(நெளுக்குளம்)

**புதிய அரசியல் சாசனம் என்பது தமிழர்களுக்கு அடிமை சாசனம் என்பதை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா சூளுரைத்திருப்பதாக வவுனியாவில் கடந்த 1228 ஆவது நாட்களாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**



இராணுவத்தளபதி அண்மையில் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வா ஒரு அறிக்கையை வெளியிட்டார். தமிழர்கள் எந்தவொரு உரிமைசார் போராட்டத்தையும் செய்யக்கூடாது என்று அவர் சொல்கிறார், ஏனெனில் எல்லாம் போய்விட்டது.

தமிழர்கள், சிங்களவர்கள் கொடுப்பதை வாங்கிக்கொண்டு அமைதியாக இருப்பதுடன், சிங்களவர்கள் தமிழர்களை தாங்கள் அடிமைகள் என்றே நினைக்கின்றார்கள்.

இந்த புதிய அரசியல் சாசனம் என்பது தமிழர்களுக்கு ஒரு அடிமை சாசனம் தான் என்பதை சவேந்திர சில்வா இப்போது சூளுரைக்கிறார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர் என்று மிகப் பெரிய பொய்யைக் கூறுகின்றார்கள். இந்த அறிக்கையின் உண்மையை நாம் அறிய ஒரே வழி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை அவர்களின் அதிநவீன உபகரணங்களுடன் எங்கள் நிலத்தில் உள்ள எஞ்சியவற்றை பரிசோதிக்க அழைப்பதன் மூலமே அந்த உண்மையை அறியலாம்.

கடந்த 11 ஆண்டுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் ஜனநாயக வாக்குகளை துஷ்பிரயோகம் செய்து தமிழர்களுக்கு துரோகம் செய்தது தான் சவேந்திர சில்வாவின் கூற்றுக்கான காரணம். 11 ஆண்டுகள் எதுவும் பயனாக நடக்கவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு செல்வாக்கு இருந்தது. அதிகாரம் இருந்தது. அவர்கள் சக்தி வாய்ந்த நபர்களைச் சந்திக்க முடிந்தது. இதைத்தான் அவர்கள் சாதித்தார்கள். 12 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் ரணிலின் அரசாங்கத்தில் பல பதவிகளைக் கொண்டிருந்தனர்.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்தால், தமிழர்களுக்கு பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மிகச் சிறந்த வாய்ப்பு கிடைக்கும்.

எல்லாம் சரியாக நடந்து கொண்டிருப்பதால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டாம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் தூதர்களிடம் தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைமை, சலுகைகள், செல்வாக்கு, கொழும்பில் வீடு மற்றும் கார்கள், இதைத்தவிர வேறு எதை தமிழனுக்கு எடுத்தார்கள் என்று யாருக்கும் தெரியாது.

ஒன்றுபட்ட ஒருமித்த பிரிக்க முடியாத பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வையே பெற சம்பந்தன் அடம்பிடிக்கிறார். கூட்டமைப்பானது சிங்கள பெரும்பான்மையின் கீழ் வாழ விரும்பினால், அமெரிக்கா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச முடியாது. இது சிங்களவர்களை கோபப்படுத்தும். சிங்களவர்களுடன் அவர்கள் நன்றாக இருக்க வேண்டும், இல்லையெனில் அவர்கள் கொழும்பில் வாழ முடியாது.

சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பாத எந்தவொரு தீர்வையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறும் என்று எந்த தமிழர்களும் நினைத்தால் அவர்கள் தங்களைத் தாங்களே கேலி செய்கிறார்கள் என்று அர்த்தம்.

ஆகவே, விலை போகாத, ஆற்றல் மிக்க, படித்த, வெளிப்படையான, இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களைத் தீர்ப்பது குறித்து அறிவுள்ளவர்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில் நாம் யாரை ஆதரவளிக்க வேண்டும் என்று நாம் எங்கள் தமிழ் தாய்மார்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தெரிவிப்போம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (2-4-299)

---

## முகக்கவசங்களில் கட்சியின் சின்னங்களை அச்சிட வேண்டாம் - மஞ்சுள கஜநாயக்க

(கொழும்பு)

சில அரசியல்வாதிகள் தங்களின் விருப்ப எண்களையும் கட்சி சின்னங்களையும் பொது மக்களிடையே விநியோகிக்கப்படும் முகக்கவசங்களில் அச்சிடும் நடவடிக்கையை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் கண்டித்துள்ளது.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள குறித்த நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, சுகாதார அவசரகால நடவடிக்கைகளின்போது அரசியல் நன்மைகளைப் பெற முயற்சிப்பதை அரசியல்வாதிகள் தவிர்க்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும் அரசியல்வாதிகள் இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து விலகி சரியான முறையில் தேர்தல் பிரசாரத்தை நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

"சில தரப்பினர் தங்களது விருப்ப எண்களையும் கட்சி சின்னங்களையும் முகக்கவசங்களில் அச்சிட்டுள்ளதை அவதானித்தோம். இது ஏமாற்றமளிக்கிறது. சுகாதார நெருக்கடியின் போது இத்தகைய நடவடிக்கைகளை நாம் தவிர்க்க வேண்டும்.

எனவே, வேட்பாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்க வேண்டும்" எனக் கூறினார். (2)

## ஒரு லட்சத்திற்கும் அதிகமான பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா நோயாளிகளை அடையாளம் காண நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் ஆயிரத்திற்கும் குறைவான பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இலங்கையில் 833 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அதில் நான்கு புதிய கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மர்தம் முதல் நாட்டில் மொத்தமாக இதுவரை ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 105 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இதுவரை இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று 2 ஆயிரத்து 37 பேருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

---

## பொதுத் தேர்தல் கடமையில் 75 ஆயிரம் பொலிஸார்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு 75 ஆயிரம் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரை கடமையில் ஈடுபடுத்த பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

தேர்தல் காலத்தில் இலங்கை சிவில் பாதுகாப்பு படையிலிருந்து சுமார் 10,000 அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்திருந்தார்.

நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், வரவிருக்கும் தேர்தல் தனிமைப் படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க நடத்தப்படும். தேசிய தேர்தல் ஆணைக் குழுவுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.


மேலும் 2020 பொதுத் தேர்தல் தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க நடைபெறுவதை உறுதி செய்வது பொலிஸாரின் பொறுப்பாகும் என்றும் இது குறித்த அறிவிப்பு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை சோஷலிச குடியரசின் 9 ஆவது நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# இந்நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்களே

# எம்மை நாம் ஆள எமக்கு உரிமை உண்டு

## தெற்கிற்கு உறைக்க உரத்துச் சொல்லும் சி.வி.விக்னேஸ்வரன்



(கொழும்பு)

**வடமாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்துக்கு அடிபணிந்து நாம் எமது அரசியல் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்கவில்லை. ஜனாதிபதி, பிரதமர் முன்பாக எமது நாக்கை அடக்கி வைக்குமாறு மறைமுகமாக கூட்டமைப்பின் தலைமை என்னைப் பலமுறை எச்சரித்த போதும் நான் எமது மக்களுக்குத் துரோகம் செய்யவில்லை. அதனால் தான் என்னைப் பதவியில் இருந்த நீக்க நடவடிக்கை எடுத்தார்கள் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்ற வீதி குளமங்காலில் நடைபெற்ற கட்சியின் கருத்துப் பரப்புக் கூட்டத்திலேயே அவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எனதருமைத் தமிழ் உறவுகளே!

1982 - 1986 வரையில் நான் ஐந்து வருடங்கள் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய மல்லாகம் நீதிமன்றம் அருகில் உங்கள் யாவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அந்தக் காலகட்டத்தில் எனக்கு வலது கரமாக இருந்து கடமையாற்றியவர் உங்களில் ஒருவர்தான். அன்றைய பல முகங்கள் இன்று இங்கில்லை. சிலர் வெளிநாடு சென்று விட்டார்கள். சிலர் இந்த உலக வாழ்வையே நீத்துவிட்டார்கள். ஆனால் அந்தக் காலம் பசுமரத்து ஆணி போல் நெஞ்சில் ஆழ்ந்து பதிந்துள்ளது.

அன்று நீதிபதி மக்களிடம் இருந்து சற்று ஒதுங்கி வாழ்ந்தகாலம். இன்று ஒரு அரசியல்வாதி உங்களுடன் ஒருவரோடு ஒருவராக உங்கள் சுகதுக்கங்களில் பங்குகொள்ள வந்துள்ளேன். என்னை இங்கு அழைத்த சகோதரர் ஸ்டார்லினுக்கு எனது முதல் நன்றி உரித்தாகுக.

அவரை அண்மையில் தான் நான் சந்திக்க நேர்ந்தது. இவ்வளவு விரைவில் அவர் தம் கை வண்ணத்தைக் காட்டுவார் என்று நான் எண்ணியிருக்கவில்லை. ஞாயிறு மாலை 6 மணிக்கு குழமங்கால் கூட்டம் என்றவுடன் உண்மையில் மகிழ்வடைந்தேன். ஏன் என்றால் ஒன்று ஸ்டார்லினின் ஈடுபாட்டைக்கண்டு. அடுத்தது குழமங்கால் செல்லப் போகின்றோமே என்று. எனவே உங்கள் ஒவ்வொருவரையும் சந்தித்ததில் மகிழ்ச்சி.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் சில விடயங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டு வாக்களிக்க வேண்டும் என்று உங்கள் ஊடாக எனது தமிழ் உறவுகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

மக்கள் ஆணையான வட்டுக்கோட்டை தீர்மானத்தை கைவிடுவதாக நாம் அறிவிக்கவில்லை. நாம் அதனால்தான் நேற்றைய தினம் எமது அங்குரார்ப்பண தேர்தல் கூட்டத்தை அந்தத் தீர்மானத்தை இயற்றிய இடத்தில் வழுக்கம்பரை அம்மன் கோயில் முன்றலில் வைத்தோம். அன்று எடுத்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் உள் அர்த்தம் 44 வருடங்களுக்குப் பிறகும் உண்மையை உணர்த்துவதாக அமைந்துள்ளதாக நாங்கள் காண்கின்றோம்.

அதனால்தான் நாங்கள் வடகிழக்கு இணைப்பு சாத்தியம் என்று கூறி எமது தாயகக் கோட்பாட்டை கைவிடாது பற்றி நிற்கின்றோம். சர்வதேச சட்டப்படி நாங்கள் ஒரு தனித்துவமான மக்கள் கூட்டம். நாமே இந்நாட்டின் ஆதிக்குடிகள் என்பதை நாம் உரத்துக் கூறிவருகின்றோம். அதனால் எம்மை நாமே ஆள எமக்குரித்துண்டு என்பதை தென்னவர்களுக்குக் கூறி வருகின்றோம்.

அடுத்து நாங்கள் சிலர் போல் முள்ளிவாய்க்காலில் இனவழிப்பு நடைபெறவில்லையென்று கூறத் தயாரில்லை. மாறாக வடமாகாண சபையில் நாம் இயற்றிய இன அழிப்பு தீர்மானத்தை சர்வதேச ரீதியாக நிரூபிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

மேலும் நல்லாட்சிக்கு ஆதரவளிப்பதாகக் கூறி நாம் ஐ.நா. சபையில் இனப்படுகொலையாளிகளைப் பிணை எடுக்கவில்லை. எடுக்கவும் மாட்டோம். மாறாக அன்றைய அமெரிக்கப் பிரதிநிதி நிஷாபிஸ்வால் இலங்கைக்குக் காலநீட்சியைக் கொடுக்க வேண்டும் என்று எம்மிடம் கூறியபோது அதை வெகுவாகக் கண்டித்தேன். அதற்கு மேலும் கூறுவதானால் முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கான சர்வதேச யுத்தக்குற்ற விசாரணையை அரசியல் தீர்வு வரப் போகின்றது என்ற கானல் நீரைக்காட்டி மழுங்கடித்தவர்கள் நாம் அல்லர். இவை எல்லாம் இதுவரையில் நடைபெற்ற திருகுதாளங்கள்.

மேலும் உரிமை அரசியல் என்று முழக்கமிட்டு கம்பெரெலிய என்ற சலுகை அரசியலுக்குள் மக்களை நாம் முடக்கவில்லை. நெல்சன் மண்டேலா என்று சிங்கள இனப்படுகொலையாளிகளை நாம் புகழவில்லை

எம்மை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்று ஏமாளிகளாய் உங்கள் முன்வரவில்லை. இவற்றை உங்களுக்குச் சொல்ல வேண்டிய காலம் கனிந்துள்ளது. அதனால்தான் இவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். வடமாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்துக்கு அடிபணிந்து நாம் எமது அரசியல் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்கவில்லை. ஜனாதிபதி, பிரதமர் முன்பாக எமது நாக்கை அடக்கி வைக்குமாறு மறைமுகமாக கூட்டமைப்பின் தலைமை என்னைப் பலமுறை எச்சரித்தபோதும் நான் எனது மக்களுக்கு துரோகம் செய்யவில்லை. அதனால் தான் என்னை பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

நான் பதவியில் இருந்த போது, பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டேன். ஆனால், நான் எதுவும் செய்யவில்லை என்று அப்பட்டமான பொய்களைக் கூறி வருகின்றார்கள். குறிப்பாக, மத்திய அரசாங்கத்தின் நிதியை மீள திரும்ப அனுப்பியதாகக் கூறி மக்களை நம்ப வைக்கப் பார்க்கின்றார்கள். எனது காலத்தில் ஒருசதம் நிதியையும் நான் திரும்ப அனுப்பவில்லை என்பதே உண்மையானது. பலமுறை இதைக் கூறிவிட்டேன். ஆனால் தொடர்ந்து எம்மைப் பற்றி பொய்கள் கூறப்பட்டு வருகின்றன. ஒரு பொய்யை ஆயிரம் தடவைகள் கூறினால் அது உண்மையாகி விடும் என்ற கணிப்பில் அவர்கள் அவ்வாறு கூறுகின்றார்களோ தெரியாது.

பொதுவாக நாம் விமர்சன அரசியல் செய்ய விரும்புவதில்லை. ஆனால் சில விடயங்களைச் சுட்டிக் காட்ட வேண்டி இருந்தது. அதனையே நான் செய்தேன்.

எம்மிடம் மாற்று வழிகள் இருக்கின்றன. நாம் என்ன செய்யப்போகின்றோம் என்ற தெளிவான சிந்தனை எம்மிடம் இருக்கின்றது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகள் தயாரித்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் மேற்கொள்ளவிருக்கும் சில நடவடிக்கைகள் .பற்றி குறிப்பிட்டுள்ளோம். தமிழ் மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்பதற்கு காரணம், தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் ஒருசிலர் தாம் நினைத்தபடி முடிவுகளை எந்தவிதமான ஆராய்வுகளும் இன்றி எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி வந்ததுதான்.

உலகின் ஆதிக்குடிகளில் ஒன்றான எமது இனத்தின் பிரச்சினை தொடர்பில் எவ்வாறு ஓரிரு நபர்கள் தாம் நினைத்தபடி முடிவுகளை எடுக்க முடியும்? இது எத்தனை ஆபத்தானது? ஆகவே, கூட்டமைப்பு செயற்பட்டது போல தமிழ் மக்களின் எதிர்காலத்தை தனி ஒருவர் தீர்மானிக்கும் வகையில் நாம் செயற்படமாட்டோம். உலகம் பூராகவும் பரந்து வாழும் எமது மக்கள் மத்தியில் பல மேதைகளும் அறிஞர்களும் இருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் உள்வாங்கி நாம் கூட்டாகச் செயற்படுவோம். எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான உலகளாவிய சிந்தனைக்கூடம் ஒன்றையும் மற்றும் அரசியல் பொருளாதார மற்றும் சமூக மேம்பாடுகளுக்காக ஆய்வு நிறுவனங்கள், அபிவிருத்தி நிதியங்களை உருவாக்குவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம். நன்கு ஆராயப்பட்ட உத்திகளின் அடிப்படையிலேயே நாம் செயற்பட வேண்டும்.

நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே எமக்கு இனி விடிவைக் கொண்டுவரும். யூதர்களின் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே அவர்களின் இன்றைய மேன்மைநிலைக்கு காரணம். உலகம் முழுவதும் பணத்துடன் அறிவையும் அவர்கள் மூலதனம் இட்டதுதான் அவர்களின் வெற்றிக்கு வழி வகுத்தது. நாமும் இஸ்ரேலியர்களுக்கு சளைத்தவர்கள் அல்லர். எம்மாலும் முடியும் என்பதை நாம் உணர வேண்டும். எம் மேல் எமக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

அதேவேளை, எமதுஅரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளைப் பெறுவதற்காக பாராளுமன்ற அரசியலை காத்திரமான முறையில் நாம் மேற்கொள்வோம். ஆட்சியில் எந்த அரசாங்கம் இருந்தாலும் எமது மக்களின் நலன்களை கவனத்தில் கொள்ளாமல் அவற்றுக்கு நாம் ஒருபோதும் முண்டு கொடுக்கமாட்டோம். சந்தர்ப்பங்கள் கிடைத்தால் எமது மக்களின் நலன்களை முன்வைத்து நாம் பேரப்பேச்சுக்களில் ஈடுபடுவோம். உதாரணமாக ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு கோரி வந்தார்கள். சில நிபந்தனைகளை முன்வைத்தேன். தயங்கினார்கள். அப்படியானால் என்னால் உங்களுக்கு ஆதரவு தர முடியாது என்று கூறிவிட்டேன். சென்று விட்டார்கள். எமது சிந்தனையில் முதலில் வருவது எமது மக்களின் நலன். எமது எந்தப் பேரம் பேசலும், கருத்துப் பரிமாற்றமும் எம் மக்களின் நலன்களையே முன்வைத்து நிகழும்.

எமது பாராளுமன்றப் பிரவேசம் மூலம் எடுக்கக்கூடிய அத்தனை வளங்களையும் உரிய முறையில் பயன்படுத்தி எமது மக்களை வலுவூட்டச் செய்யும் பொருளாதார நடவடிக்கைகளை நாம் சுயநலம் இன்றி மேற்கொள்வோம். அதேவேளை, எவ்வாறு எமது மக்களின் தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்பது பற்றி சிந்தித்து வருகின்றோம்.

இதற்கு எவ்வாறு வெளிநாடுகளையும் புலம்பெயர் தமிழ் மக்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்திகளை ஆராய்ந்து வருகின்றோம். யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு-கிழக்கில் பொருளாதார தன்னிறைவை ஏற்படுத்த பெரிதும் பாடுபட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பாளர் ரூபன் எம்முடன் இணைந்துள்ளார். அவர் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார். எமது எதிர்கால பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் அவர் முக்கிய பங்கு வகிப்பார். அவரிடம் மிகுந்த திறமையும் அனுபவமும் இருக்கின்றது.

அதேபோல் எமது யாழ்ப்பாண, வன்னி மாவட்ட மற்றும் மட்டக்களப்பு வேட்பாளர்கள் பல தகைமைகளைக் கொண்டவர்கள். ஆசிரியர்கள், வங்கியாளர்கள், பொறியியலாளர்கள் என்று பலர் இருக்கின்றார்கள். இம்முறை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை வெற்றியடைச் செய்வதால் எமது மக்கள் பலத்த பயன் அடைவார்கள் என்பதைக் கூறி வைக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவம் இன்று களை இழந்துள்ளதற்குக் காரணம் அவர்களின் சுயநல அரசியல். ஆகவே நீங்கள் மீனுக்கே வாக்களிக்க வேண்டும். மீன் ஆட்சி வர ஆதரவு தரவேண்டும்.

எமது மக்களின் உரிமைகளை அடைவதற்கான எமது அணுகுமுறை ஏனைய எல்லா கட்சிகளையும் விடவும் மாறுபட்டு காணப்படுகின்றது என்பதை நீங்கள் உணர வேண்டும். மீனுக்கு இம்முறை வாக்களியுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன் என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.(2-4)

# இராசிபலன்

**30.06.2020**
**ஆனி 16, செவ்வாய்க்கிழமை**
**தசமி முன்னிரவு 7.36 மணிவரை**
**சுவாதி பின்னிரவு 4.13 மணிவரை**
**சுபநேரம் 10.26-11.56 மணிவரை**
**இராகுகாலம் 2.56-4.26 மணிவரை**
**சந்திராஷ்டமம்- ரேவதி**

வளவன்

**மேஷம்**
நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், பொன்னான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், உடல் நலன் சீராகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**ரிஷபம்**
குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**
பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கடகம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்**
சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கன்னி**
தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**துலாம்**
தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**
சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு**
நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**மகரம்**
சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள் வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கும்பம்**
அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல்நலன் சீராகும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**
கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், திடீர் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தில் சிறுசிறு விவாதங்கள் ஏற்பட்டு விலகும்.

**உன் பணியை முடிந்தவரை சிறப்பாகச் செய்**

# போதைப்பொருள் விற்பனையாளர்களுடன் தொடர்பு பொலிஸ் அதிகாரிகள் நால்வர் அதிரடிக் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலிற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரியொருவரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பை பேணிய, போதைப்பொருள் தடுப்பு பிரிவை சேர்ந்த 4 பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவரின் வீட்டிலிருந்தே இந்த வாகனம் மீட்கப்பட்டது. போதைப்பொருள் கடத்தல், போதைப்பொருள் விற்பனையின் மூலம் கிடைத்த பணத்தை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்ட இந்த வாகனம் மினுவாங்கொடையிலுள்ள அவரது வீட்டில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், மோட்டார் சைக்கிள் ஒன்று 9 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பணம், நான்கு கிரெடிட் கார்டுகள். ஜி.பி.எஸ் இயந்திரம், செயற்கைக்கோள் தொலைபேசி மற்றும் சிம் கார்ட் கொண்ட மொபைல் போன் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதற்கு முன்னதாக, போதைப் பொருள் தடுப்பு பணியகத்தின் 4 பொலிஸாரும் ஒரு பொதுமகனும் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறனர்.

இது தொடர்பான விசாரணையில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு தென்மாகாணத்தில் முன்னெடுத்த சுற்றிவளைப்புகளின் போது கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் சுமார் நூறு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின்போதைப்பொருளை, போதைப் பொருள் வர்த்தகர் ஒருவரிடமே மீள விற்பனை செய்யப்பட்ட தகவல் வெளியானது. தற்போது டுபாயிலுள்ள போதைப்பொருள் வர்த்தகரான கிஹான் பொன்சேகா எனும் (மாகந்துரே மதூஷின் சகா) நபருக்கும் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் ஒரு குழுவால் விற்பனை செய்யப்பட்டதாக கூறப்படும் போதைப் பொருளுக்கும் தொடர்புள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த போதைப் பொருள் தடுப்பு பிரிவின் குழு இடையில் சுமிந்தவுக்கு ஒரு தொகை போதைப் பொருளை கிஹான் பொன்சேக்காவின் ஆலோசனைக்கமைய பொல்வத்தை பகுதியில் வைத்து கையளித்தமையும் கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்தே 4 பொலிஸார் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-8)

## அறிவித்தல் - கேள்வி கோரல்

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து) உப்புக்கடை ஒழுங்கை இல.826/12 கே.கே.எஸ். வீதி தட்டாதெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள காரியாலயத்தில் தற்காலிக சைக்கிள் பாதுகாப்பு கொட்டகை அமைப்பதற்கு கேள்வி கோரப்படுகின்றது. இவ் வேலைக்கான விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் அலுவலக கடமை நேரத்தில் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 2020.07.15 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொலைபேசி
இல: 0212223131

தலைவர்
யாழ்.ம.சி.க.கூ.சங்கங்களின்,
சமாசம்.

(C-9793)

## பகிரங்க ஏல விற்பனை

வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனைக்குத் தீர்மானிக்கப்பட்ட பொருட்கள் 14.07.2020 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணிக்கு பாடசாலையில் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

பொருள் விபரம் பாடசாலை நேரத்தில் அதிபர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர் (3144)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர். பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை







தோற்றம்
13 • 06 • 1944

மறைவு
02 • 06 • 2020

பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தென்மூலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (02.07.2020) வியாழக்கிழமை அன்று பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(3143)

சங்கானை வீதி,
அச்சுவேலி.

தொ.இல: 0763418292

குடும்பத்தினர்.

# முல்லை. மீனவர்களின் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு பெற்றுத்தரப்படும்

## டக்ளஸ் உறுதி

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காணப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கடற்றொழிலாளர்கள் சார் கலந்துரையாடல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தலை தடை செய்தல், அனுமதிக்கப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட அனுமதித்தல், வெளிமாவட்ட மீனவர்களைக் கட்டுப்படுத்தல், கொக்கிளாய் கடல் நீரேரியில் இயந்திரப் படகு பயன்டுத்தி மீன்பிடித்தலைத் தடை செய்தல், உள்ளூர் மீனவர்களுக்கு கடலட்டை பிடிக்கும் அனுமதி வழங்கல் ஆகிய பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

மேலும், கரைவலை தொழிலில் ஈடுபடுவோருக்கு நிரந்தர அனுமதி வழங்கல், நந்திக் கடல் மற்றும் நாயாறு போன்ற நீர் நிலைகளைப் புனரமைத்தல் உட்பட முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்த அவர், அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சுருக்கு வலைப் பயன்பாடு போன்ற தீர்வு காணப்படாத விடயங்களுக்கு, அடுத்த வாரமளவில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் ஆகியோர் தலைமையில் கூடி ஆராய்ந்து பெரும்பாலானவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து சமுகமான தீர்வினைக் காணுமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2-4)

# ஊரடங்கு காலத்தில் இடம்பெற்ற கைதுகளும் அபராதங்களும்

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரையான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியால் 72 ஆயிரத்து 284 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 31 ஆயிரத்து 377 பேருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு 14 ஆயிரத்து 595 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கை மீறி பயணித்தவர்களின் 20 ஆயிரத்து 681 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

கொரோனாத் தொற்று காரணமாக கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று முன்தினம் முழுமையாக நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# சுற்றிவளைப்பில் 827 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 827 பேர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது போதைப்பொருள் மோசடியுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 480 பேரும் சிறு குற்றங்களுடன் தொடர்புடைய 106 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 199 பேரும் கைது செய்யப்பட்டனர். (5-8)



யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் ஒத்துழைப்புடன் கடந்த சனிக்கிழமை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இக் குருதிக் கொடை நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குருதி வழங்கல் பிரிவினர் கலந்து கொண்டிருந்தனர். குறித்த குருதிக் கொடை வழங்கும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ்.பிரதேச செயலாளர் சா.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் சுமார் 54 பேர் குருதி வழங்கினர்.

# மும்மொழிக் கற்கைநெறி 2 ஆம் தவணை ஆரம்பம்

யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மும்மொழிக்கற்கை நிலையத்தால் நடத்தப்பட்ட 2018/2019 கல்வி ஆண்டிற்குரிய B பிரிவு சிங்கள, ஆங்கில மொழிக் கற்கை மாணவர்களுக்கான முதலாம்தவணை இறுதி பரீட்சை முடிவுகளின் பிரகாரம், டிப்ளோமா இரண்டாம்தவணை கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் வார இறுதி நாள் பிரிவு 04.07.2020 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் வார நாள் பிரிவு 06.07.2020 திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

எனவே விண்ணப்பித்த தகுதிவாய்ந்த மாணவர்கள் தவறாது சமுகம் அளிக்க வேண்டும் என மும்மொழிக் கற்கை நிலைய பதில் பணிப்பாளர் பி.என்.சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

# குணமடைவு 1678

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து இன்று மட்டும் 17 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான 2037 பேரில் இதுவரை 1,678 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் சமூக பரவல் நாட்டில் இல்லை என்பதனால் நாடளாவிய ரீதியில் அமுலில் இருந்த பகுதியளவிலான ஊரடங்கு உத்தரவு நேற்று முதல் தளர்த்தப்பட்டது.

இந்நிலையில் தொற்று உறுதியான்வர்களில் 382 பேர் தொடர்ந்தும் வைத்திய கண் காணிப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2020 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதால் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி 60 வயதினை பூர்த்தி செய்யும் கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (5)



கடந்த 15 ஆம் திகதி காலமான ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் அமரர்.சிவகுருநாதன் ரங்கராஜாவுக்கு பொன்னாலை கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை அஞ்சலி நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.உமணகேனன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பொன்னாலை பிள்ளையார் ஆலய அர்ச்சகர் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்களான ஸ்ரீ சற்குணராசா, வி.பி.சிவநாதன், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் எஸ். கிருஷ்ணானந்தன், வடக்கு -கிழக்கு மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.மகாலிங்கம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுத் தலைவர் தி.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சுகாதார முறைப்படி மீன் வெட்டும் கட்டடம் அமைக்க நகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மீன் சந்தையில் மீன் வெட்டும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் நகரசபை நிர்வாகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

சாவகச்சேரி மீன் சந்தையில் மீன் வெட்டிக் கொடுக்கும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இதுவரை காலமும் அறை ஒன்று காணப்பட்ட போதிலும் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலைமை காரணமாக சமூக இடைவெளியை பேணும் நோக்கில் குறித்த அறை மூடப்பட்டு மீன் சந்தைக்கு வெளியே அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் மீன் வெட்டும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு கட்டட வசதியோ அல்லது நீர் வசதியோ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என உறுப்பினர்களால் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த சபை அமர்வின் போது சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து மீன் வெட்டுபவர்களுக்கு காற்றோட்டத்துடன், சமூக இடைவெளியை பேணக் கூடிய வகையிலான கட்டட வசதியையும் நீர் வசதியையும் ஏற்படுத்திக்கொடுக்க நகர சபை முன்வந்துள்ளது. அத்துடன் மீன் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மீனை வெட்டி விற்பனை செய்ய முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-30)

# யஸ்மின் சூக்காவிடம் நட்டஈடு கோருகிறார்

# மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ்சலே

(கொழும்பு)

**உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்காவிடம் 100 கோடி ரூபா நட்ட ஈடு கோரி, தேசிய உளவுத் துறை பிரதானி மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலே, சட்டத்தரணி ஒருவர் ஊடாக கடிதம் அனுப்பியுள்ளார்.**



குறித்த நட்ட ஈட்டை செலுத்தாவிடின் 14 நாட்களில் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்காவுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக குறிப்பிட்டே, சட்டத்தரணி பஹன் வீரசிங்க ஊடாக அவர் இந்த நட்ட ஈடு கோரும் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

டி.எம்.எல். கூரியர் சேவை ஊடாக இந்த நட்ட ஈடு கோரும் கடிதம், இங்கிலாந்தின் லண்டனில் உள்ள யஸ்மின் சூக்காவின் முகவரிக்கும் அவரது அலுவலக தலைமையகத்தின் முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த மே 22 ஆம் திகதி, தேசிய உளவுத்துறை பிரதானியான சுரேஷ் சலே மற்றும் மேலும் நான்கு இராணுவத்தினர் பிரிகேடியர் தரத்தில் இருந்து மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டனர். அது தொடர்பில் கடந்த ஜூன் முதலாம் திகதி விஷேட ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்த யஸ்மின் சூக்கா,

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டதாகக் கூறப்படும் தற்போது தென் அமெரிக்காவில் வசிக்கும் வைத்தியர் வரதராஜா துறைராஜன் என்பவரை சித்திரவதை செய்தமை தொடர்பில் சுரேஷ் சலே பொறுப்புக் கூற வேண்டியவர் எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலையுடன் தொடர்புடைய இராணுவ வீரர் ஒருவரும் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவின் குழுவில் சேவையாற்றியதாகவும் சுட்டிக்காட்டி, சுரேஷ் சலே மேஜர் ஜெனரல் பதவி உயர்த்தப்பட்டமையை யஸ்மின் சூக்கா விமர்சித்திருந்தார்.

இந்நிலையிலேயே யஸ்மின் சூக்கா கூறும் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள சுரேஷ் சலே, தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளதாக கூறி தனது சட்டத்தரணி ஊடாக நட்ட ஈடு கோரி சட்டக் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

சர்வதேச அமைப்பொன்றின் பிரதானி ஒருவருக்கு எதிராக, இலங்கையில் இராணுவ சேவையில் இருக்கும் அதிகாரி ஒருவர், நட்ட ஈடு கோரும் சட்ட ரீதியிலான கடிதம் ஒன்றினை அனுப்புவது இதுவே முதல் முறையாகும். (2)


## INVITATION FOR BID (IFB)

### Department of Agrarian Development, Jaffna District

1. The Assistant Commissioner of Department of Agrarian Development, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for renovation of minor tanks as described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the CIDA/ICTAD registration and qualification requirements listed below. Additional details are provided in the Bidding Documents.
4. Interested eligible bidders may obtain further information and inspect the Bidding Documents at the Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna during office hours.
5. A complete set of Bidding Documents in English language should be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Commissioner, Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna from 30.06.2020 to 13.07.2020 from 09:00 hrs to 15:00 hrs, upon payment of a nonrefundable fee of Rs.2000.00 for each set. The method of payment will be by cash.
6. Bids shall be delivered in duplicate to the Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna on or before 10:00 hrs on 14.07.2020 Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid up to 60 Days after the deadline for bid submission.
8. All bids shall be accompanied by a bid security Issued by a commercial bank operating in Sri Lanka approved by the Central Bank of Sri Lanka using the form of Bid Security included in Section – 9. The amount of Bid Security shall be as per details given below and shall be valid to 90Days from the date of Bid opening.
9. Pre-bid meeting will be held at Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna commencing at10.00 a.m. on 08.07.2020

10.The Table referred to above is:

| No | Contract No & Title of contract | Proposed contract Price (MnRs.) | Bid Security Amount (Rs) | Renovation Period | Required ICTAD Registration in Irrigation |
|---|---|---|---|---|---|
| 1 | *9/7/Cha -01/Dept/2020* Renovation Of Vidathalpalai Channel at Chavakachcheri ASC Area | 3.05 | 31,000.00 | 2 Months | C8 and C7 |

(C-9792)

Assistant Commissioner,
Department of Agrarian Development, Jaffna District
T.P No - 021 222 2396 Fax – 021 222 4058



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 42 1/2 செவ் 12 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. முகாமையாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10875

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: கலைமாணி பயிலுநர், கிராம அலுவலர்.
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10876

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: செவ் 3 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc Civil Engineering, HND Quantity Serveying, Trainee Engineer
எதிர்பார்ப்பு: அரச, உயர் தனியார் உத்தியோகம்
தொ.இ: B/10878

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 20 1/2 செவ் 12 இல் உயரம்:5'9"
தகைமை/தொழில் க.பொ.த.சா.த. இ.போ.ச. சாரதி
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: B/10879

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 46/16 சூரி,செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Sc, கடல்சார் சுற்றுச் சூழல் பாதுகாப்பு.(அரச)
எதிர்பார்ப்பு: சம தாராதர மணமகன் சைவ போசனம் உடையவர் மட்டும்
தொ.இ: G/10931

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 46 1/2 செவ் 5 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: B.Sc in Nursing. தற்போது அரச வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியில் உள்ளார்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்
தொ.இ: G/10935

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 45 செவ் 11 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/10937

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 12 செவ் 9 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: வீதி அபிவிருத்தித் திணைக்களம் (அரச)
எதிர்பார்ப்பு:தகுந்த வரன்
தொ.இ: G/10939

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பொதுமக்களும் பொது அமைப்புக்களும் இணைந்து போதைப்பொருள் ஒழிப்புப் பேரணி





(மன்னார்)

மன்னாரில் போதை ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக மன்னார் எருக்கலம்பிட்டி கிராம மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.


அதற்கு அமைவாக நேற்று முன்தினம் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி ஒன்றை எருக்கலம்பிட்டி கிராம மக்கள் முன்னெடுத்தனர்.

குறித்த பேரணி மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி 5 ஆம் கட்டை சந்தியில் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை போதைப்பொருள் ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

எருக்கலம்பிட்டி கிராமத்தில் போதைப்பொருள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த கிராம மக்கள் உள்ள பொது அமைப்புக்களுடன் போதை ஒழிப்பு குழு ஒன்றை அமைத்து குறித்த கிராமத்தில் போதை ஒழிப்பு மற்றும் பாவனையை முற்றாக ஒழித்து போதைப்பொருள் அற்ற கிராமமாக மாற்றும் நோக்கில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கமைவாக குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)

## துப்பாக்கி ரவைகள் மீட்பு




(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் சந்தி 10 ஆம் கட்டைப்பகுதியில் தனியார் காணியொன்றில் அத்திபாரம் வெட்டியபொழுது புதைக்கப்பட்ட நிலையில் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டதையடுத்து தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து தருமபுரம் பொலிஸார் துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.

(4-5-316)

## அம்பலப்பெருமாள் குளம் புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதியில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் புனரமைப்பதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ள போதிலும் அவ்வேலைகளை முன்னெடுப்பதில் நெருக்கடிகள் இருப்பதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகிறது.

குளத்தின் வான்பகுதியில் குளத்தின் நீர் துவாரம் வழியாக வெளியேறுகிறது. அப்பகுதியினை கடந்த பத்தாண்டுகளாக விவசாயிகள் மண் மூடைகள், கற்கள் கொண்டு தற்காலிகமாக நீர் வெளியேறாமல் தடுத்து இருந்த போதிலும் நீர்ப்பாசனத் திணைக்களம் கடந்த ஒரு வாரமாக குறித்த பகுதியில் புனரமைப்பு வேலையை முன்னெடுத்திருந்த போதும் வேலைகளை நிறைவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதற்கான காரணம் தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர் வேலை நடைபெறுகின்ற பகுதியில் மழை வீழ்ச்சி இடம் பெற்றதன்காரணமாகுறித்த வேலைத் திட்டத்தினை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலைமை காணப்படுகிறது.

எனினும் அப் பகுதிக்கு நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு வேலைகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் உள்ள முக்கிய குளமான அம்பலப்பெருமாள் குளத்தில் காலபோகத்தில் ஐந்நூறு ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

குளத்தின் வான்பகுதி பல இடங்களில் சேதமடைந்து காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிப்பதுடன் குறித்த வான்பகுதியினை புனரமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் தற்போது வான்பகுதி புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. (4-5-350)

## வீதிப்புனரமைப்பு சீரின்மை வடக்கு ஆளுநருக்கு மகஜர்

(கண்டாவளை)

கரைச்சிப்பிரதேச சபையின் கீழ் உள்ள ஊரியான் 2 ஆம் யுனிற் வீதியின் புனரமைப்பு பணிகள் தரமற்ற கிரவல் மண் கொண்டு புனரமைப்பது தொடர்பிலும் மதகு அகற்றப்பட்டமை தொடர்பிலும் வடமாகாண ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.


கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபையின் கீழ் உள்ள ஊரியான் 2 ஆம் யுனிற் குறுக்கு வீதி கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எதுவித புனரமைப்புகளுமின்றி காணப்பட்ட நிலையில் கரைச்சிப் பிரதேச சபையின் இரண்டு மில்லியன் ரூபாய் சபை நிதி மூலம் 200 மீற்றர் தூரம் வரையான பகுதி புனரமைப்பிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் மழை காலங்களில் வெள்ளம் பாய்வதனால் இவ்வீதியை கொங்கீறிட் வீதியாக புனரமைத்து தருமாறு கிராமமட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்து அதற்கான கடிதங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தனர்.

இருந்தபோதும் தரமற்ற கிரவல் மண் போடப்பட்டு குறித்த வீதியின் புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இவ்வீதியில் நல்ல நிலையில் காணப்பட்ட நீர் வழிந்தோடும் மதகும் அகற்றப்பட்டுள்ளது. இதனால் மழை காலங்களில் மக்கள் குடியிருப்புக்களில்வெள்ளநீர் தேங்கும் நிலை ஏற்படும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்படி குறைபாடுகள் தொடர்பிலும் கிரவல் மண் போடுவது தொடர்பிலும் கரைச்சிப்பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உடனடியாக தரமற்ற கிரவல் மண்மாற்றப்பட்டு உரிய முறையில் புனரமைக்கப்படும் என தவிசாளரால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

எனினும் இவ்வீதி புனரமைப்பின் குறைபாடுகள் மற்றும் மதகு அகற்றப்பட்டுள்ளமை தொடர்பில் கடந்த 25 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (4-5-315)



விசுவமடு 572 படைப்பிரிவின் இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளுக்கு தொற்று நீக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் நேற்று முன்தினம் தருமபுரம் மத்திய கல்லூரியில் கிருமித் தொற்று நீக்கும் பணிகள் நடைபெற்றன.

(படம்:- தருமபுரம் 'செய்தியாளர்)

## கிராமத்துக்கு ஒரு வீடு நிகழ்ச்சித்திட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காஞ்சிபுரம் கிராமத்தில் கிராமத்திற்கு ஒரு வீடு வேலைத் திட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட வீடு நேற்று பயனாளியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சமான நோக்கு" எனும் எண்ணக்கருவுக்கமைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் "உங்களுக்கு வீடு, நாட்டுக்கு எதிர்காலம்" எனும் திட்டத்திற்கமைய "கிராமத்துக்கு ஒரு வீடு" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட காஞ்சிபுரம் கிராமத்தில் ஆறு இலட்சம் ரூபாவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடு நேற்று பயனாளிகளிடம் உத்தியோக பூர்வமாக கண்டாவளைப் பிரதேச செயலர் ரீ.பிருந்தாகரன் கையளித்தார். (4-5-315)

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

02


கலாநிதி க.தவலிங்கம்

தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இம் முக்கியத்துவமிக்க பட்டினங்களில் வியாபாரம், போக்குவரத்து என்பன அதிகரித்துக் காணப்பட்டது. இதனால் ஏற்பட்ட சன நெருசல், அதனால் எழுந்த பிரச்சினைகளைத் தீர்க்கவும் இம்மாநகர சபைகள் உழைத்தன. மக்களின் சுகாதாரம் பேணவும் தொற்று நோய் பரவாமலிருக்கவும் இம் மாநகர சபைகள் பெரிதும் உதவி வந்தன.

1871 இல் கொண்டுவரப்பட்ட கிராமக் குழுக்கள் **(Village Committee)** சட்டத்தின் மூலம் உள்ளூர் நிர்வாகத்துக்காக கிராமக் குழுக்களும் நீதி பரிபாலனத்துக்காக கிராம நீதிமன்றங்களும் உருவாக்கப்பட்டன.

நாளடைவில் நாட்டின் பல பாகங்களிலும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம், போக்குவரத்து என்பன விருத்தியடைந்தன. வர்த்தகர்கள் ஒன்று சேரும் பகுதிகள் அதிகரித்து அவை சிறு சிறு பட்டினங்களாக மாறின.

1892 இல் சிறுநகரங்களில் மின்சாரம், நீர்வழங்கல், வடிகால், பொது வசதிகள், சந்தை போன்றவற்றை பரிபாலிப்பதற்காக சுகாதார சபைகள் **(Sanitary Board)** உருவாக்கப்பட்டன. இதனை பரிபாலனம் செய்வதற்காக அதிகாரிகளை ஆளுநர் நியமனம் செய்தார்.

பெரிய நகரங்களில் இத்தகைய நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 1898 இல் உள்ளூர் சபைகள் **(Local Board)** உருவாக்கப்பட்டன. 1920 இல் கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சிச் சட்டம் நகர மாவட்ட சபைகள், கிராம மாவட்ட சபைகள், சாதாரண மாவட்ட சபைகள் என்ற மூன்று சபைகளை உருவாக்கியது. இச்சபைக்களுக்காக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

1924 இல் கிராம சபைகளும் **(Village Councils)**, 1939 இல் நகர சபைகளும் **(Urban Councils)**, 1946 இல் பட்டின சபைகளும் **(Town Councils)** உருவாக்கப்பட்டது. இதனால் பெரிய நகரங்கள் நகர சபைகளாகவும் சிறிய நகரங்கள் பட்டின சபைகளாகவும் ஏனைய சபைகள் கிராம சபைகளாகவும் உருவாகின.

### 1856 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நீர்ப்பாசனத்துறை தொடர்பான கட்டளைச் சட்டம்

பிரித்தானியர்கள் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய பொழுது நடைமுறையில் இருந்த "கிராம சபை" கட்டமைப்பினை ஒத்த நிறுவனமாக நீர்ப்பாசனத்துறைக்கான கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. நீர்ப்பாசனத்தைப் பராமரித்தல், நீர் விநியோகம் செய்தல், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பல்வேறு சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் தொடர்பான தகவலைச் சேகரித்தல், அவற்றைச் செயற்படுத்தல் போன்ற விடயங்களை அமுல்படுத்தும் நோக்குடன் மேற்படி கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது.

**பிரித்தானியர்கள் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய பொழுது நடைமுறையில் இருந்த "கிராம சபை" கட்டமைப்பினை ஒத்த நிறுவனமாக 1856 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நீர்ப்பாசனத்துறை தொடர்பான கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது.**

இவ்வாறான விடயங்களைச் செயற்படுத்துவது கட்டாயப்படுத்தப்படாமையும் விரும்பியவர்கள் இவற்றைச் செயற்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டமையும் இச் சட்டத்தில் காணப்பட்ட விசேட அம்சமாகும். இச் சபைக்கு பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்ட அப் பிரதேசத்திற்கான அரச அதிபர் **(Government Agent)** அல்லது உதவி அரச அதிபர் தலைமை வகிப்பதோடு மற்றைய அங்கத்தவர்களை அரச அதிபர் அல்லது உதவி அரச அதிபர் நியமிப்பார். நுவர, கலாவிய, பதுளை, தென்மாகாணம், சத்கோறளை ஆகிய பிரதேசங்களில் இக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

### 1861 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வீதிக் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் (The Road Committees Ordinance No 10 of 1861)

இச் சட்டத்தின் மூலம் மாகாண வீதிக் குழுக்கள் மற்றும் மாவட்ட வீதிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இக் குழுக்களில் அரச உத்தியோகத்தர்கள், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளடங்குவர். இச் சட்டத்தின் மூலம் பழைமை வாய்ந்த "வெல் விதானை" என்னும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. வெல்விதானை என்பவர் கிராமச் சபைகளில் உள்ள மக்களது சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது அவரது பணிப் பொறுப்பாகும். இக் குழுக்கள் 1951 வரையில் செயற்பட்டன. அதன்பின் அவ் வேலைகள் பொதுவேலைத் திணைக்களத்திடம் (Public Works Department) மாற்றப்பட்டது.

**1861 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வீதிக் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் மூலம் மாகாண வீதிக் குழுக்கள் மற்றும் மாவட்ட வீதிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இக் குழுக்களில் அரச உத்தியோகத்தர்கள், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளடங்கினர்.**

### 1865 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

கொழும்பு, கண்டி மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசங்கள் இதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டன. இது இலங்கையினதும் ஆசியப் பிராந்தியத்தினதும் உள்ளூராட்சியின் வரலாற்றில் இடம்பெற்ற நினைவில் கொள்ளத்தக்கதொரு நிகழ்வாகும்.

இதுபற்றிய சட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது என்னவென்றால் வாக்குமூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் தேர்தலில் முன்மொழியப்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட சபைக்கு அரசாங்கத்தின் குறிப்பிட்ட சில அதிகாரங்களை கையளிப்பதாகும்.

**1865 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் கொழும்பு, கண்டி மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது இலங்கையினதும் ஆசியப் பிராந்தியத்தினதும் உள்ளூராட்சியின் வரலாற்றில் இடம்பெற்ற நினைவில் கொள்ளத்தக்கதொரு நிகழ்வாகும். கொழும்பு மாநகர சபை ஏழு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

கொழும்பு மாநகர சபை ஏழு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு ஐந்து உறுப்பினர்களை ஆளுநர் நியமித்து மாநகர முதல்வர் பதவி மேல்மாகாண அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டது. சபையின் பதவிக் காலம் மூன்று வருடங்கள் என நிச்சயிக்கப்பட்டது.

மாநகர சபையின் உறுப்பினர்களுக்கு நீதிமன்ற அதிகாரம் அளிக்கப்பட்ட போதிலும் அவர்களுடைய இச் சேவைக்கான கொடுப்பனவுகளைப் பெறும் உரிமையை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அதன் பின்னர் அச் சட்டத்தின் ஏற்புடைமை காலி நகரத்தை உள்ளடக்கும் வகையில் 1866 ஆம் ஆண்டில் காலி மாநகர சபை அதிகாரப் பிரதேசம் ஆரம்பிக்கப்பட்டது.

மக்களுக்கும் அவர்களது பிரதேசங்களின் சுயாட்சி தொடர்பான கொள்கைகளை உள்ளூர் அதிகாரப் பிரதேசங்களில் விரிவாகச் செயற்படுத்துவதற்கான தேவை இந்த மாநகர சபைகளுக்கு ஏற்பட்டது. 1931 ஆம் ஆண்டு வரை இச் சபையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர்.

1931 இன் பின் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மறுசீரமைப்பின் மூலம் சகல உறுப்பினர்களும் தெரிவு **(elected members)** செய்யப்பட்டனர்.

1936 ஆம் ஆண்டில் கொழும்பு மாநகர சபைக்கென தனியானதொரு நியதிச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அவ் யாப்பு கண்டி, காலி மாநகர சபைகளில் 1936 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது.

1941 ஆம் ஆண்டில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபை நியதிச் சட்டம் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டன. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு 1947 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை 40 இற்கு மேற்பட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. 1948 ஆம் ஆண்டில் கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய 3 மாநகர சபைகள் மட்டுமே இருந்ததுடன் 1949 ஆம் ஆண்டிற்குள் யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் நுவரெலிய ஆகிய மூன்று நகரங்களுக்கான மூன்று மாநகர சபைகள் நிறுவப்பட்டன.

1950 இல் நீர்கொழும்பு மாநகர சபை நிறுவப்பட்டது. அதன் பின்னர் 1950-1980 காலப்பகுதிக்குள் தெஹிவளை- கல்கிசை (1959), இரத்தினபுரி (1967), பதுளை (1963), மட்டக்களப்பு (1967), மாத்தளை (1963), மொறட்டுவை (1997), ஸ்ரீ ஜயவர்தனபுர- கோட்டே (1997) ஆகிய மாநகர சபைகளும் உருவாக்கப்பட்டதுடன் மொத்தமாக 14 மாநகர சபைகள் காணப்பட்டன.

இவற்றுள் 5 மாநகர சபைகள் மேல் மாகாண சபைப் பிரதேசத்தினுள் அமையப்பெற்றுள்ளன.

இதன் பின்னர் 2002 இல் அநுராதபுரம், கம்பஹா, மாத்தறை, கல்முனை ஆகிய மாநகர சபைகள் உருவாக்கப்பட்டன. 2011 இல் பண்டாரவளை, அக்கரைப்பற்று, அம்பாந்தோட்டை, கடுவெல, தம்புள்ளை ஆகியவை மாநகர சபைகளாக தரம் உயர்த்தப்பட்டன. தற்போது இந்த மாநகர சபைகளின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளன.

### 1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராமக் குழுக்கள் கட்டளைச் சட்டம் (The Village Communities Ordinance No. 26 of 1871)

இந்தச் சட்டத்தின் மூலம் கிராமங்களின் பொதுத் தேவைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(தொடரும்...)




# இந்திய- சீன எல்லைப் பிரச்சினை தாக்குதலுக்கு தயாராகிறது சீனா

(பீஜிங்)

இந்தியாவை குறைத்து எடை போடக் கூடாது எனவும், இந்தியாவை முதல் ஆளாகத் தாக்க சீனா தயாராக இருக்க வேண்டும் என்றும் அந்நாட்டின் முன்னாள் விமானப்படை மேஜர் ஜெனரல் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர்களில் ஒருவரான குயோ லியாங் தெரிவித்துள்ளார்.



இந்தியா - சீனா இடையே நிலவிவரும் எல்லைப் பிரச்சினை போர் மூழும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், நாம் போருக்கு தயாராக வேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், இந்தியா-சீனா பிரச்சினை இப்போது சரியாகாது. இது முழு அளவில் பெரிதாக வெடிக்க வாய்ப்புள்ளது. ஆகவே சீனா போருக்கும் தயாராக இருக்க வேண்டும்.

அத்துடன், எல்லையில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர் முதல் ஆளாக படைகளை குவிக்க வேண்டும் என்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

நாம் போருக்குத் தயாராக இருப்பதுடன் சிறிய, சிறிய போர் மூலம் இந்தியாவைக் கட்டுப்படுத்த நாம் திட்டங்களை வகுக்க வேண்டும்.


இரண்டு நாடுகளும் அணு ஆயுத பலம் கொண்ட நாடுகள். எல்லையில் ஆயுதங்களைக் குவிக்க ஆரம்பிக்க வேண்டும்.

இந்தியா எப்போது வேண்டுமானாலும் அத்துமீறலை நிகழ்த்த வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ள அவர், முழுமையான பிரச்சினை தீர இப்போது வாய்ப்பு இல்லை என சுட்டிக்காட்டியுள்ளதுடன் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கும் காலம் இனி இல்லை எனவும் தெரிவித்தார். (2)

# இந்தியா எனது ஆட்சியை கவிழ்க்க முயற்சி நேபாள பிரதமர் கேபிசர்மா குற்றச்சாட்டு

(காத்மண்டு)

திருத்தப்பட்ட நாட்டின் வரைபடத்தை வெளியிட்ட காரணத்தினால் இந்தியா தனது ஆட்சியைக் கவிழ்க்க முயல்வதாக நேபாள பிரதமர் குற்றம்சாட்டியுள்ளார்.



இந்தியாவின் சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய 5 மாநிலங்களுடன் 1,850 கி.மீ.எல்லையை நேபாளம் பகிர்ந்து கொள்கிறது. இரு நாடுகளும் உறுதியான பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ளன. இந்தியா நேபாளத்தின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக உள்ளது.

இரு நாடுகளும் எல்லையைத் தாண்டி மக்களை சுதந்திரமாக நகர்த்துவதற்கான நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. தற்போது, நேபாளத்தைச் சேர்ந்த சுமார் 32 ஆயிரம் கூர்கா வீரர்கள் இந்திய இராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர். இரு நாடுகளுக்கும் இடையே பாரம்பரியமான நட்புறவு தொடர்ந்து வந்தாலும், பல தசாப்தங்களாக எல்லைப் பிரச்சினையும் நிலவி வருகிறது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் இருக்கும் லிபுலேக், காலாபனி, லிம்பியதுரா பகுதிகளை நேபாளம் சொந்தம் கொண்டாடி வருகிறது. இந்த விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக நீடித்து வரும் உரசல் போக்கு தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதற்கு காரணம் இந்தியாவின் ஆட்சேபத்தை பொருட்படுத்தாமல் லிபுலேக், காலாபானி, லிம்பியதுரா ஆகிய பகுதிகளை நேபாளத்துடன் இணைத்து புதிய வரைபடத்தை நேபாள அரசு தயாரித்துள்ளதுதான்.

இந்த வரைபடத்துக்கு அங்கீகாரம் அளிக்க வகை செய்யும் நேபாள அரசியல் சாசன திருத்த மசோதாவுக்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்து உள்ளது. நேபாள அரசின் இந்த நடவடிக்கைக்கு இந்தியா கடும்கண்டனம்தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான உணர்வை வளர்ப்பது தேர்தலில் வெற்றிபெற அந்த நாட்டு பிரதமர் கேபி ஷர்மா ஒலிக்கு உதவியது. தற்போது கொரோனா விவகாரத்தில் அவரது அரசின் மீது எழுந்துள்ள அழுத்தங்களை சமாளிக்க இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை தூண்டி வருகிறார்.

தங்களுக்கு சீனாவின் ஆதரவு பெருகி வருவதை உணர்ந்தே நேபாளம் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கி உள்ளது. நேபாளம் கிளப்பியுள்ள பிரச்சினைக்கு சீனா ஒரு முக்கிய காரணியாக உள்ளது.

இந்த நிலையில் இந்தியா தனது ஆட்சியை கவிழ்க்க முயல்வதாக, நேபாள பிரதமர் கேபி சர்மா ஒலி குற்றம் சாட்டி உள்ளார்.

காத்மண்டுவில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய கேபி சர்மா, "இந்திய தூதரகம் தனக்கு எதிராக செயற்படுவதாகவும் காத்மண்டுவில் பல்வேறு இடங்களில், தனது ஆட்சியை கவிழ்ப்பதற்கான ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறுவதாகவும்" தெரிவித்துள்ளார். (2)

# டாக்காவில் படகு கவிழ்ந்து விபத்து 23 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 23 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



தென்மேற்கு டாக்காவில் புரிகங்கா ஆற்றில் படகு கவிழ்ந்தபோது படகில் சுமார் 50 பயணிகள் இருந்தனர் என தீயணைப்பு சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களில் ஆறு பெண்கள் மற்றும் மூன்று குழந்தைகள் அடங்குவர் என்றும் சிலர் பாதுகாப்பாக கரைக்கு நீந்தி வந்தபோதும் பலரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இது குறித்து கருத்து தெரிவித்துள்ள மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர், இதுவரை, நாங்கள் 23 சடலங்களை மீட்டுள்ளோம், காணாமல் போனவர்களைத் தேடி வருகின்றோம் என தெரிவித்தார்.

விரிவான உள்நாட்டு நீர் வழிகளைக் கொண்ட ஒரு தாழ்வான நாடான பங்களாதேஷில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான மக்கள் படகு விபத்துக்களில் உயிரிழப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன. (2)

ப

ய

•பத்து




(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பங்குச் சந்

சூட்டில், 10பேர் உயிரிழந்துள்

நான்கு துப்பாக்கிதாரிகளை

# சீன நிறுவனங்

# ஒப்பந்தங்க

## பீகார் அரசு

(டில்லி)

கங்கை நதிக்கு குறுக்கே மகாத்மா காந்தி பாலம் கட்டுமானப் பணிகளுக்காக சீன நிறுவனங்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை பீகார் அரசு இரத்து செய்துள்ளது.

இது குறித்து பீகார் மாநில வீதிப் போக்குவரத்து அமைச்சர் நந்த் கிஷோர் கூறுகையில், "பாட்னாவில் கங்கை நதியின் குறுக்கே 5 கி.மீ தொலைவுக்கு பாலம் கட்ட 2900 கோடி ஒப்பந்தத்தை சீன நிறுவனங்களுக்கு வழங்கி இருந்தோம்.

அந்த இரு நிறுவனங்களும் சீனாவின் 'சைனா ஹார்பர் எஞ்சினியரிங் கம்பனி, ஷான்க்ஸி ரோட் பிரிட்ஜ் கம்பனி ஆகிய நிறுவனங்களுடன் கூட்டு வைத்து இந்த திட்டத்தை செயற்படுத்த இருந்தன.

நாங்கள் இந்த இரு சீன நிறுவனங்கள் இல்லாமல் திட்டத்தை செயற்படுத்த கோரினோம். அதற்கு அந்த இரு நிறுவனங்களும் மறுத்ததால் ஒப்பந்தத்தை இரத்து செய்துள்ளோம். மீண்டும் புதிதாக டெண்டர் விடுவோம்" எனத் தெரிவித்து

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும் தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் – 01

❖ தரப்பட்டுள்ள உருக்களோடு மிகத் தொடர்புடைய சொல்

1. 1) அருங்காட்சியகம்
2) பாதை
3) பண்ணை




2. 
1) கண்காட்சி
2) கற்றல்
3) தொழில்

3. நிரை ஒன்றில் அருண், தருண், வருண், கரன், தரன் ஆகியவர்கள் நிற்கின்றனர். இவர்களில் வருணுக்குப் பின்னால் தருண் நிற்கின்றான். எனினும் அவன் கரனுக்கு முன்னால் நிற்கின்றான். கரன் தரனுக்கு முன்னால் நிற்கின்றான். இவர்களில் நிரையின் முதலில் நிற்பவர் அருணாகும். இத்தகவலின் அடிப்படையில் முதலில் இருந்து மூன்றாவதாக நிற்பவர் யார்?
1) கரன் 2) தரன் 3) வருண்

4. கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களின் கோல அமைவினை அவதானித்து வினாவுக்குரிய விடையினைத் தெரிவு செய்க.


| | | |
|---|---|---|
| வ | க | ப |
| ட் | த | ண |
| ச | ட | ம் |



என்பதற்குரிய சொல் எது?
1) கட்டணம்
2) பட்டம்
3) சட்டம்

5. 4715 என்பது R S P L என எழுதப்படுமாயின் 1745 என்பது எழுதப்படும் விதம் யாது?
1) S P R C 2) R S L P 3) P S R L

6. அருகில் உள்ள உருவை புள்ளிக் கோட்டின் வழியாக வெட்டினால் கிடைக்கும் தள வடிவம் யாது?





7. என்னிடம் ரூபா 10.00, 20.00 பெறுமதியான 22 முத்திரைகள் உள்ளன. இவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 310.00 எனின் 20 ரூபா முத்திரைகளின் எண்ணிக்கை யாது?
1) 9 2) 13 3) 7

8. அருகில் தரப்பட்டுள்ள படங்களுக்கிடையில் வித்தியாசம் இருப்பின் A கீழ் கோடிடுக அவ்வாறு இல்லாவிடின் B கீழ் கோடிடுக
1) A 2) B 3) C



9. சதுர வடிவான மண்டபம் ஒன்றினைச் சுற்றியுள்ள தூண்களது எண்ணிக்கை 64 எனின் குறித்த மண்டபத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் உள்ள தூண்களது எண்ணிக்கை யாது?
1) 17 2) 16 3) 19


10. 
அருகில் A B C எனும் மூன்று காகிதக் கீலங் களது அளவுகள் காட்டப்பட்டுள்ளன அதில் A,C ஆகியவற்றின் நீளத்திற்கும் கீலம் B யின் நீளத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?
1) 2cm 2) 3cm 3) 5cm

11. 
இதற்குப் பொருத்தமான விடை
1) 3/16 2) 2/8 3) 3/4

12. பட்டியில் உண்டு பாட்டியில் இல்லை கட்டையில் உண்டு மட்டையில் இல்லை குளத்தில் உண்டு குளத்தில் இல்லை வருமதியில் உண்டு தருமதியில் இல்லை அன்னத்தில் உண்டு அண்ணத்தில் இல்லை எனின் இதில் ஒளிந்துள்ள சொல் எது?
1) பகலவன் 2) பகைவன் 3) தலைமகன்

| 500g சீனி + 250g தேயிலை= 200.00 | 500gதேயிலை +100gமாசி = 400.00 | 100gமாசி +500gசீனி = 225.00 |
|---|---|---|

13. இத்தகவலுக்கு அமைவாக 100g தேயிலையின் விலை யாது?
1) ரூபா 150.00 2) ரூபா 50.00 3) ரூபா 100.00

14. 
= 60 எனின் ○ இன் பெறுமானம் யாது?
1) 15 2) 12 3) 24

15. 
உருவில் நிழற்றப்பட்ட பகுதி
1) 1/2 இலும் கூடியது
2) 1/2 இலும் குறைந்தது
3) 1/2 க்குச் சமன்

16. கடை ஒன்றில் நான்கு சவர்க்காரங்கள் வாங்கினால் ஒரு சவர்க்காரம் இலவசமாகக் கிடைக்கும். இதற்கமைவாக குமார் 15 சவர்க்காரங்கள் வாங்கினான். இவ்வாறு வாங்கப்பட்ட சவர்க்காரங்களது மொத்தப் பெறுமதி ரூபா 420.00 எனின் ஒரு சவர்க்காரத்தின் விலை யாது?
1) ரூபா 35.00 2) ரூபா 28.00 3) ரூபா 18.00

17. பின்வரும் கணிதச் செய்கையில் இடைவெளிக்குரிய விடை யாது?

6 ■ ● = 6
4 ■ ● = 2
6 ■ ● = 8
9 ■ ● =........

1) 5
2) 4
3) 6

18. குளக் கரைக்கு நீர் அருந்த வந்த மான்கள், கொக்குகள் ஆகியவற்றின் எண்ணிக்கை சமமாகும். அவ்வாறுள்ள பிராணிகள் 28 எனின் அவற்றின் கால்கள், தலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை யாது?
1) 108 2) 112 3) 88

19. பின்வருவனவற்றை வகைப்படுத்தினால் அமையும் மிகச் சரியான விடை யாது?





1) A,C B,D 2) A,B C,D 3) A ,D B,C

20. சிறுவன் ஒருவன் ஓரிடத்தில் இருந்து 25m வடக்கு நோக்கி சென்று அங்கிருந்து மேற்கு நோக்கி 10m சென்று பின்னர் தெற்கு நோக்கி 15m சென்று இறுதியாக கிழக்கு நோக்கி 10m சென்று தனது பயணத்தை நிறைவு செய்தான் எனின் சிறுவன் பயணத்தை ஆரம்பித்த இடத்திற்கும் இப்போது பயணத்தை நிறைவு செய்த இடத்திற்கும் இடையிலான தூரம் யாது?
1) 10m 2) 15m 3) 60m


21. அண்ணா, அம்மாவை விட உயரமானவர் எனினும் அப்பாவை விட உயரம் குறைந்தவர். நான் அம்மாவிலும் உயரம் கூடியவன் எனினும் அண்ணாவிலும் உயரம் குறைந்தவன். தங்கை அம்மாவிலும் உயரம் குறைந்தவள் எனின் எங்களில் உயரம் கூடியவர் யார்?
1) அம்மா 2) அண்ணா 3) அப்பா

22. ஒரு வாகனமொன்று 2 லீற்றர் பெற்றோலில் 40km செல்லும். 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்த குறித்த வாகனம் 70km சென்றது எனின் எஞ்சியிருக்கும் பெற்றோலில் இன்னும் எவ்வளவு தூரம் செல்லும்?
1) 150km 2) 130km 3) 140km

23. 

24. கலை நிகழ்வொன்றை பார்வையிட வந்தவர்களில் 2/8 பங்கினர் ஆண்களாகும். எஞ்சியதில் 3/6 பங்கினர் பெண்களாகும்.ஏனையவர்கள் சிறுவர்களாகும். இவ்வாறு வருகை தந்த சிறுவர்களின் எண்ணிக்கை 150 எனின் குறித்த நிகழ்வுக்கு வருகை தந்தவர்களது மொத்த எண்ணிக்கை யாது?

1) 200 2) 300 3) 100

25. 

இவை தொடர்பான பிழையான கூற்று

1) முட்டையிட்டு இனம் பெருக்கும்
2) சிறகடித்து வானில் பறந்து செல்லும்
3) கால்களால் இடம் பெயரும்

நான்கு பிள்ளைகள் வாங்கிய பொருட் தொகுதி தொடர்பான விபரம் கீழேதரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாவுக்குரிய விடையினைத் தெரிவு செய்க.

| சீலா | மாலா | பாலா | லீலா |
|---|---|---|---|
| முட்டை | பருப்பு | மாஜரின் | பயறு |
| மாசி | சீனி | சீனி | பருப்பு |
| பருப்பு | தேயிலை | அரிசி | சர்க்கரை |
| சீனி | பயறு | பருப்பு | மாஜரின் |
| பயறு | சவர்க்காரம் | தேயிலை | சவர்க்காரம் |

26.நான்கு பிள்ளைகளும் வாங்கிய பொருள் எது?


1) சீனி 2) பருப்பு 3) பயறு

27. நகரம் ஒன்றில் கோயிலுக்குக் வடக்கே 500m பாடசாலை உள்ளது. பாடசாலைக்குக் கிழக்கே 500m தூரத்தில் நூலகம் உள்ளது. நூலகத்திற்கு தெற்கே 500m தூரத்தில் வங்கியும் உள்ளன எனின் வங்கிக்கு எத்திசையில் கோயில் உள்ளது?

1) வடக்கு 2) கிழக்கு 3) மேற்கு

28. என்னிடம் உள்ள ஒரு தொகை மாபிள்களில் 1/2 தங்கைக்கும் எஞ்சியதில் 1/4 பங்கைத் தம்பிக்கும் கொடுத்தேன். இப்போது என்னிடம் எஞ்சியுள்ள மாபிள்களின் எண்ணிக்கை 75 எனின் என்னிடம் ஆரம்பத்தில் இருந்த மாபிள்களின் எண்ணிக்கை யாது?


1)150 2) 300 3) 200

29. 


இச் சதுரமுகியில் உள்ள இலக்கங்களுக்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள இலக்கங்கள் இரண்டு மடங்காக இருக்குமாயின் குறித்த சதுர முகியின் ஆறு பக்கங்களிலும் உள்ள இலக்கங்களின் கூட்டுத் தொகை யாது?

1) 30 2) 28 3) 32

30. எண்கோல அமைவுகளை அவதானித்து இடைவெளிக்குரிய விடையின் கீழ் கோடிடுக




1) 5
2) 6
3) 4

31.

| | |
|---|---|
| 2 6 | |
| 24 | 8 |

| | |
|---|---|
| 73 | |
| 12 | 28 |

| | |
|---|---|
| 9 | 10 |
| 21 | |

1) 13
2) 5
3) 36


32. அமுதா தை மாதத்திலும் பார்க்க ரூபா 300 குறைவாக மாசி மாதத்திலும், மாசி மாதத்திலும் ரூபா 400அதிகமாக பங்குனி மாதத்திலும் சேமித்தாள். அவள் மாசி மாதம் ரூபா 1700 ஐச் சேமித்தால் மூன்று மாதங்களிலும் சேமித்த மொத்தப் பணம் எவ்வளவு?

1) ரூபா 5,700 2) ரூபா 5,800 3)ரூபா 5,900

33. இரண்டு நண்பர்கள் புறப்படும் போது அவரவரிடம் உள்ள பணத்தை ஒப்பிட்டுப் பார்த்தார்கள். முதல் நண்பன் எனக்கு நீ 100 ரூபாய் கொடுத்தால் உன்னைப் போல் நான் இரு மடங்கு பணம் உள்ளவனாவேன் என்றான். மற்றையவன் இவ்வளவு தானா? நீ எனக்கு 10 ரூபாய் கொடுத்தால் நான் உன்னைப் போல் ஆறு மடங்கு பணம் உள்ளவன் ஆகி விடுவேன் என்றான். முதல் இரண்டாம் நண்பன் வைத்திருந்த பணம் முறையே.

1) ரூபா 170, ரூபா40 2) ரூபா 40,ரூபா 70 3) ரூபா 40,ரூபா 170

34. கீழுள்ள சதுரமுகி எல்லாப் பக்கங்களும் தீந்தை பூசப்பட்டு பின்னர் சிறிய சதுர முகிகள் ஒவ்வொன்றாகக் கோட்டின் வழியாகத் தனித்தனியாக வெட்டியெடுக்கப்பட்டன. இதில் இரண்டு பக்கங்களில் மட்டும் தீந்தை பூசப்பட்டு இருக்கும் சிறிய சதுரமுகிகளது எண்ணிக்கை யாது?



1) 12 2) 8 3) 16

35. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதைவிட இருமடங்காக இருக்கும்.

1) 3 வருடங்கள் 2) 4 வருடங்கள் 3) 8 வருடங்கள்

36. உருக்களின் அமைவின் அடிப்படையில் அடுத்து வரவேண்டிய உரு எது?




37.


| | | |
|---|---|---|
| R | L | K |
| S | N | T |
| O | P | A |

அருகில் உள்ள எழுத்தட்டையினை தளவாடியில் பார்க்கும் போது எழுத்து T எத்தனையாவது நிரலில் தெரியும்?

1) 2வது 2) 3வது 3) 1வது

38. காந்தன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் 12 பேர் நின்றனர். வரிசையில் கடைசியில் நின்றவர் முதலாவது நபராக வரும் வரையில் அனைவரும் மறுபக்கத்திற்கு திரும்பினர். அப்போது காந்தனுக்கு முன்னால் நால்வர் நின்றனர் எனின் அவ்வரிசையில் மொத்தமாக எத்தனை பேர் நின்றனர்?

1) 14 2) 15 3) 16

39. 


உருக்களின் பெறுமானங்களுக்கு அமைவாக இடைவெளிக்குரிய விடை யாது?

1) 22 2) 21 3) 20

40. ஒரு வரிசையில் 60 செடிகள் நடப்பட்டன..அவ்வரிசையில் கத்தரி, வெண்டி, மிளகாய் என்ற ஒழுங்கில் செடிகள் நடப்பட்டன. முதலில் கத்தரியும் அடுத்து வெண்டியும் அடுத்து நான்கு மிளகாயும் பயிரிடப்பட்டன. எனின் அங்கு பயிரிடப்பட்ட மிளகாய்ச் செடிகள் எத்தனை?

1) 10 2) 60 3) 40

## 26.06.2020 அன்று வெளியான வணிகக்கல்வியும் கணக்கீடும் விடைகள்

வினா இல 01

1. (அ) உரிமையாளர் - இந்திரன்
ஊழியர் - மூன்றுபெண்கள்
முகாமையாளர் - விசாகன்
வாடிக்கையாளர்-தனிநபர்கள், பரடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், அரசு
வழங்குநர் - பழங்களை வழங்குவோர்
(ஆ) பொருள் உற்பத்தி வணிகம்

2. பலம்:- 1. இயற்கை பழங்களைக் கொண்டு பழப்பானங்களை உற்பத்திசெய்தல்
2.உணவுத் தொழில்நுட்பம் தொடர்பாக பட்டம் பெற்ற முகாமையாளர் காணப்படல்
வாய்ப்புக்கள்:- 1. நகர்ப்புறத்தில் காணப்படல்
2.பாடசாலை,அலுவலகங்கள் காணப்படுகின்றமை

3. (அ) தண்மதி குளிர்பான நிலையத்தின் பெயரானது அதன் உரிமையாளரின் முழுப்பெயரைக் கொண்டு காணப்பட்டால் பதிவுசெய்ய வேண்டிய அவசியமில்லை.
(ஆ) திட்டமிடல்- வணிகத்தை விரிவுபடுத்த தீர்மானித்தல்
ஒழுங்கமைத்தல்- ஊழியர்களைநியமித்தல்

4. (அ) பங்குடைமை வணிகம் அல்லது கூட்டிணைக்கப்பட்டகம்பனி
(ஆ) உற்பத்திப்பொருள், இடம்,மேம்படுத்தல்

5. (அ) ரூ 350 000
உரிமை+பொறுப்பு=சொத்து
350 000 + 160 000 = 510 000
(ஆ) இயந்திரங்கள்,கட்டடங்கள்

6. (அ) வங்கிக்கடன் வட்டிக் கணக்கு வரவு ரூ 600
அட்டுறுவங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு ரூ 600
(ஆ) மின்சாரக் கட்டணம்,தொலைபேசிக் கட்டணம்,ஊழியர் சம்பளங்கள், முகாமையாளர் சம்பளம்

7. காசேடு/காசுப்புத்தகம்:- பற்றுச்சீட்டு,கைச்சாத்து
கொள்வனவு நாட்குறிப்பு:- கொள்வனவு பட்டியல்
விற்பனை நாட்குறிப்பு:- விற்பனைப் பட்டியல்

8. இயந்திரம் ரூ 1500
கட்டடம் ரூ 2000

9. காசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 70 000 | கொள்வனவு | 80 000 |
| விற்பனை | 150 000 | மின்சாரம் | 4 000 |
| கடன்பட்டோர் | 20 000 | தொலைபேசிக்கட்டணம் | 6 000 |
| | | கடன்கொடுத்தோர் | 10 000 |
| | | ஊழியர் சம்பளம் | 60 000 |
| | | முகாமையாளர் சம்பளம் | 20 000 |
| | | மீ/செ | 60 000 |
| | 240 000 | | 240 000 |

10. நடைமுறைச் சொத்துக் கணக்கு
கடன்பட்டோர் ரூ. 160000
காசு ரூ 60000
நடைமுறைப்பொறுப்பு
கடன்கொடுத்தோர் ரூ 90000

வினா இல. 02

1.(3) ஊழியர்
2.(2)அரசியல் சூழல்
3(1) இலங்கை மத்திய வங்கி
4.(4)அகச்சூழல்
5.(4)அக, புறச்சூழல் இரண்டையும்
6.

வினா இல. 03

1. உரிமையாளர்
2. வாடிக்கையாளர்
3. பணவீக்கம்
4. பூகோளமயமாதல்
5. பலம்


# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும்
# க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை
# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்

**நேரம்: 2 மணித்தியாலம்** **வினாப்பத்திரம் - 02**

✡ முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1) i) எண்ம எண் 731 ஐச் சமவலு பதினறும எண்ணாக மாற்றுக. உரிய படி முறைகளைக் காட்டுக.

ii) கீழ்வரும் தருக்கச் சுற்றைக் கருதுக.





a) மேலே காட்டப்பட்டுள்ள தருக்கச் சுற்றிற்குரிய பூலியன் கோவையை எடுத்துரைக்க.

b) அட்டவணையில் தரப்பட்டுள்ள உள்ளீடுகள் (A, B, C) மேலே காட்டப்பட்டுள்ள தருக்கச் சுற்றிற்கு பிரயோகிக்கப்படும் போது வருவிளைவுகள் யாவை?

| A | B | C | output |
|---|---|---|---|
| 0 | 0 | 0 | |
| 1 | 1 | 1 | |

iii) பின்வரும் அட்டவணையிலுள்ள முதலாவது நிரல் 1 தொடக்கம் 4 வரையான எண்களால் காட்டப்பட்டுள்ள வெவ்வேறு சாதனங்களுடன் தொடர்புபட்ட பணிகளைக் காட்டுகின்றது. இரண்டாவது நிரல் இச்சாதனங்களை ஒரு கணினியுடன் இணைப்பதற்கு தேவைப்படும் துறைகளைக் (Ports) காட்டுகின்றது. எனினும் இப்பணிகளும் துறைகளும் சரியான ஒழுங்கில் தரப்படவில்லை.

| பணி | துறை |
|---|---|
| 1- CRT திரையை பல்லூடக எறியியுடன் இணைத்தல் | A-  |
| 2- லேசர் அச்சுப்பொறியை முறைமை அலகுடன் இணைத்தல் | B -  |
| 3- வலையமைப்பு வடத்தை இணைத்தல் | C -  |
| 4- நுணுக்குப்பன்னியை இணைத்தல் | D –  |

முதலாவது நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு பணிக்கும் பயன்படுத்தும் சாதனங்கள் ஒவ்வொன்றையும் கணினியுடன் இணைப்பதற்குரிய சரியான துறையை இரண்டாவது நிரலிருந்து இனங்காண்க. பணிக்குரிய எழுத்தையும் உரிய துறையையும் உமது விடைத்தாளில் எழுதுக.

iv) a) நீர்வீழ்ச்சி மாதிரியத்தின் அனுகூலம் ஒன்றை எழுதுக?
b) நீர்வீழ்ச்சி மாதிரியத்தின் முதலாவது படிமுறையை எழுதுக?


v) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி வடிவமைப்பதற்கு முன்னரும் வடிவமைத்த பின்னரும் சொற்றொடரைக் கருதுக. (சொற்றொடரின் எழுத்துப்பருமன்(font size) மாறவில்லையெனக் கருதுக.)
வடிவமைப்பதற்கு முன்னர் - Welcome to 19th Century
வடிவமைப்பதற்கு பின்னரும் -**Welcome to 19th Century**

vi) நிரல் A மற்றும் நிரல் B இனை இணைக்குக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| x- இந்த சேவையகமானது ஆள்களப்பெயரை IP முகவரியாக மாற்றப் பயன்படுத்தப்படுகின்றது. | ISP |
| y – வீட்டிலிருந்து இணையத்திற்கு அணுக இது தேவை | DNS |
| z – தேவையற்ற மின்னஞ்சல்களை சேமிப்பது | HTTP |
| p- HTML ஆவணங்களை பரிமாறுவதற்கு | Spam |

vii) பெறுமானங்கள் 70, 150, 35 ஆகியன முறையே மாறிகள் a மற்றும் b இனுள் ஒப்படைக்கப்படுவதற்கான பஸ்கால் கூற்றை எழுதுக?

viii) கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப்படமானது சில முழுஎண்களை வாசித்து அவற்றில் இரட்டை எண்களின் கூட்டுத்தொகையை காட்சிப்படுத்தலாகும்.




a) X, Y என்பவற்றிற்கு முறையே சரியான கோவையை எழுதுக?

b) நீங்கள் முறையே 3, 8, 10, -1 இனை N இற்கு பெறுமானங்களாக வழங்கினால் கிடைக்கும் வருவிளைவு யாது?

ix) முகில் கணிமையின்(Cloud computing) மூன்று சேவைகளைத் தருக?

x) Students, Student_Subject, Subject ஆகிய அட்டவணைகளைக் கருதுக.

**Students**

| Stu_No | Name |
|---|---|
| 1011 | Kala |
| 1234 | Kampan |
| 1452 | Kavi |
| 1011 | Kani |

**Subject**

| Sub_No | Name |
|---|---|
| 23 | ICT |
| 12 | Maths |
| 45 | Tamil |

**Student_Subject**

| Stu_No | Sub_No |
|---|---|
| 1011 | 23 |
| 1234 | 23 |
| 1452 | 12 |
| 1011 | 45 |

கீழே காட்டப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா என மேற்கூறப்பட்ட அட்டவணைகள் தொடர்பாகக் கூறுக.

a) Stu_No மற்றும் Sub_No என்பன Student_Subject அட்டவணையில் ஒருங்குசேர்ப்பு சாவியாகும்.( composite key)

b) Stu_No என்பது Students அட்டவணையில் முதன்மைச் சாவியாகும்.

c) Sub_No என்பது Subject அட்டவணையில் ஒரு அந்நியச்சாவியாகும்.

d) Students மற்றும் Subject அட்டவணைக்கு இடையிலான தொடர்புடைமை ஒன்றுக்கு பலவாகும்

2) a) கீழேயுள்ள பட்டியலைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக. பட்டியல்:- முகப்புப் பக்கம் (home page), பதிவேற்றம் (uploading), பதிவிறக்கம் (downloading), அஞ்சல் சேவையகம் (mail server), வலைச் சேவையகம் (web server)

i. சேவைதருநரின் கணினியிலுள்ள (server computers)தகவல்களை சேவைப் பயனருக்கு (client computers) வழங்குதல் ............என அழைக்கப்படும்.

ii. சேவைப் பயனரின் (client computers) கணினியிலுள்ள தகவல்களை சேவை தருநரின் கணினிக்கு (server computers) வழங்குதல் ...........என அழைக்கப்படும்.

iii. சேவைப் பயனர் கணினிக்கு ............ ஆனது மின்னஞ்சல்களைப் பரிமாறுவதற்கும் சேமித்து வைப்பதற்கும் உதவுகின்றது.

iv. வலைக்கடப்பிடங்கள் (web site) பற்றிய அடிப்படை தகவல்கள் அடங்கிய பக்கத்தை............என அழைப்பர்.

b) தொலை அணுகல் (remote access)ஊடாக மேற்கொள்ளத்தக்க இரண்டு பணிகளை எழுதுக?

c) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா என கூறுக.

i. இணையத்தினூடாக குறுஞ்செய்திகளை மிக விரைவாக பரிமாறி அளவளாவுதல் (chat) உடனடி செய்தி அனுப்புதல்.

ii. வலைப்பக்கங்கள் பல வலைக்கடப்பிடங்களை கொண்டதாகும்.


iii. உலகளாவிய வலையூடாக (WWW) வழங்கப்படும் சேவையே இணையமாகும்.

iv. இணையத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு கணினியையும் தனித்துவமாக இனங்காண்பதற்கு URL பயன்படுத்தப்படும்.

3) உரு.2 இல் காட்டப்பட்டுள்ள வலைப்பக்கத்தின் HTML ஆதாரமூலம் 1-10 வரையான முகப்பு அடையாளங்களினால் அடையாள ஒட்டுக்களோ பரமானங் இன்றி உரு1 இல் காட்டப்பட்டுள்ளது.

```
<html>
<head>
<❶>Internal Computer Hardware</❶>
</head>
<body>
<h1❷=center>Internal Computer Hardware</h1>
<❸>Introduction</❸>
<p ❷=justify>Computer Hardware is the physical
part of a computer,
as distinguished from the
<a ❹
="http://en.wikipedia.org/wiki/Computer_softwar
e"> computer software</a>
that executes or runs on the hardware. The
hardware of a
computer is infrequently changed, while software
and data are modified
frequently. The term soft refers to readily created,
modified, or erased. These
are unlike the physical components within the
computer which are hard.</p>
<img ❺="Inside Computer"
❻="inside_computer.jpg" />
<❼size=10 color=green>
<❽><font color=red ❾=arial>Some
examples</font></❽>
<❿type=circle>
<li> Mother Board </li>
<li>Central Processing Unit</li>
<li>RAM</li>
<li>firmware</li>
</❿>
</body>
```

உரு 1




உரு 2

உரு 1 இல் காட்டப்பட்டுள்ள 1 தொடக்கம் 10 வரையான முகப்பு அடையாளங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருந்தும் சரியான அடையாள ஒட்டை அல்லது பரமானத்தைப் பின்வரும் பட்டியலிலிருந்து தெரிந்தெடுத்து அதனை முகப்படையாள எண்ணிற்கு எதிரே எழுதுக பட்டியல் :- (ol,ul, alt,h1,h2,href,src,br, hr, u, face,align,title)

4) a) இலங்கையில் 2002 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள இயங்குநிலை பாடசாலைகளின் எண்ணிக்கை அடிப்படையிலான விபரங்களை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது காட்டுகின்றது. (மூலம் : - http://www.statistics.gov.lk/)

| | A | B | C | D | E | F | G | H |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Number of functioning Schools by grade span - 2002 | | | | | | | |
| 2 | Province | Primary only | Primary and Secondary | | | Secondary Only | | Total |
| 3 | | Grade 1- 5 | Grade 1- 8 | Grade 1- 11 | Grade 1- 13 | Grade 6- 11 | Grade 6- 13 | |
| 4 | Western | 260 | 46 | 675 | 325 | 14 | 73 | |
| 5 | Central | 506 | 90 | 531 | 303 | 2 | 51 | |
| 6 | Southern | 219 | 47 | 555 | 256 | 8 | 66 | |
| 7 | Northern | 333 | 89 | 278 | 134 | 5 | 29 | |
| 8 | Eastern | 330 | 80 | 321 | 196 | 1 | 9 | |
| 9 | North Western | 227 | 63 | 636 | 297 | - | 27 | |
| 10 | North Central | 21 | 59 | 347 | 152 | - | 11 | |
| 11 | Uva | 195 | 73 | 373 | 183 | 1 | 4 | |
| 12 | Sabaragamuwa | 306 | 96 | 502 | 192 | - | 39 | |
| 13 | Sri Lanka | | | | | | | |
| 14 | Percentage | | | | | | | |

i) Western மாகாணத்திலுள்ள இயங்குநிலை பாடசாலைகளின் மொத்த தொகையை காண்தற்கான சார்பை கலம் H4 இல் எழுதுக?

ii) தரம் 1- 5 ஆரம்ப பாடசாலைகள் மட்டும் கொண்ட பாடசாலைகளின் மொத்த தொகையை காண்பதற்கான சார்பை கலம் B 13இல் எழுதுக?

iii) இலங்கையிலுள்ளஇயங்குநிலைப் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை காணப்தற்கான சார்பை கலம் H13 இல் எழுதுக?

iv) இலங்கையிலுள்ள தரம் 1- 5 ஆரம்ப பாடசாலைகள் மட்டும் கொண்ட பாடசாலைகளின் சதவீதத்தை கலம் இல் B14 காண்பதற்கான சூத்திரத்தை எழுதுக?

உதவி :- percentage=(total primary schools only/total functioning schools in sri lanka)*100 இச்சூத்திரமானது ஏனைய கலங்களிற்கு இழுக்கும்போது அவற்றிற்கான சதவீதம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

b) முன்வைப்பு மென்பொருளை உபயோகித்து கீழ்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.

i. எந்த படவில்லை நோக்கில்(slideview) நீங்கள் உங்கள் முன்வைப்பை முழுத்திரையிலும் பார்ப்பீர்கள்?

ii. எந்த படவில்லை நோக்கில் (slideview) படவில்லைகளை மீளவொழுங்குபடுத்தல் அல்லது நீக்குதல் எளிதாகும்?

iii. முன்வைப்பு மென்பொருளின் நீட்சி(extension) யாது?

iv. முன்வைப்பு மென்பொருளிலுள்ள ஒரு படவில்லையின் ஒவ்வொரு உருப்படிக்கும் பிரயோகிக்கப்படும் கட்புலவிளைவுகளை எவ்வாறு அழைப்பர்?

5) a) பின்வரும்தரவுத்தள அட்டவணைகளை உபயோகித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

Customer

| Cus_ID | Name |
|---|---|
| 1001 | Ragesh |
| 1002 | Akadh |
| 1003 | Mugesh |

Bank

| Bank_ID | B_Name |
|---|---|
| 8921 | ABC |
| 8929 | CXY |
| 8928 | LED |

Customer_Bank

| Cus_ID | Bank_ID | Acc_No |
|---|---|---|
| 1001 | 8921 | 74931 |
| 1001 | 8928 | 28741 |
| 1002 | 8929 | 43289 |
| 1003 | 8921 | 73141 |
| 1002 | 8928 | 28493 |

a) முதன்மைச்சாவிகள் இரண்டையும் அதற்கு ஒத்த அட்டவணைகளையும் எழுதுக?

b) அந்நியச்சாவிகள் இரண்டையும் அதற்கு ஒத்த அட்டவணைகளையும் எழுதுக?

c) புலம் Cus_NIC இனைச் சேர்ப்பதற்கு பொருத்தமான தரவுத்தள அட்டவணை யாது?

d) புதிய வாடிக்கையாளர் Mugan என்பவர் LEDவங்கியில் இணைகின்றார். வங்கியானது 28413Acc_No என்ற இனை வழங்கியது.

i) இற்றைப்படுத்தப்பட வேண்டிய அட்டவணைகள் எது/எவை?.

ii) அட்டவணையில்/ அட்டவணைகளில் இற்றைப்படுத்த வேண்டிய நிரை/நிரைகளை எழுதுக?

e) "LMN"எனும் புதிய வங்கி திறக்கப்படுகின்றது. அதன் Bank_ID8923 ஆகும்.

i) இற்றைப்படுத்தப்பட வேண்டிய அட்டவணைகள் எது/எவை?.

ii) அட்டவணையில்/ அட்டவணைகளில் இற்றைப்படுத்த வேண்டிய நிரை/ நிரைகளை எழுதுக?

f) ABC வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களின் Cus_ID,Name, Acc_No காட்சிப்படுத்துவதற்கான வினவல் எழுதப்படுகின்றது. இதற்கான வருவிளைவு யாது?

6) a)பின்வரும் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு முறைமை விருத்தி வாழ்க்கை வட்டத்தில்(SDLC) இவ் ஒவ்வொரு செயற்பாடும் எக்கட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றன எழுதுக?

P – SDLC இன் "தற்போதைய கட்டம்" என அழைக்கப்படுவதோடு அவ்வப்போது மதிப்பீடு செய்து தேவையானபோது மேம்படுத்தப்படும் கட்டம்

Q – புதிய முறைமை பயன்படுத்துவதற்கு பயனர்களுக்கு எக் கட்டத்தில் பயிற்சி வழங்கப்படுதல்.

S - ஒவ்வொரு செய்நிரலுக்குமான ஆவணத்தை தயாரித்தல்.

T – நூலகரைச் சந்தித்து அவருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளல்

U – பயனர்இடைமுகம் காட்சியளிக்கும் விதமும் தரவுகளை தயாரித்து சேமித்தலும்.

V – தவறுகளை நீக்குதல்.


b) ஒரு நிறுவனம் தற்போதுள்ள கைமுறைத் தகவல் முறைமையை பிரதியீடு செய்யும் முகமாக கணினி அடிப்படையிலான புதிய முறைமையை விருத்திசெய்தது. அந் நிறுவனம் இரு முறைமைகளுடனும் சிறிதுகாலம் தொடர்ந்து வேலை செய்ய தீர்மானித்துள்ளது.

i) இங்கு பயன்படுத்தப்படும் அமுலாக்க/நிறுவுதல் செயற்படுத்தல் யாது?

ii) மேற்கூறப்பட்ட அமுலாக்க செயற்படுத்தலின் அனுகூலம் ஒன்றையும் பிரதிகூலம் ஒன்றையும் எழுதுக?

7) a) முக்கோணியின் மூன்று பக்க நீளங்கள் A, B, C ஆகியன உள்ளீட்டிற்காக தரப்பட்டுள்ளது. கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப்படமானது இருசமபக்க (isosceles) அல்லது சமபக்க (equilateral) அல்லது சமனில்பக்க (scalene) முக்கோணி என கண்டுபிடிப்பதாகும். 1 தொடக்கம் 6 வரையானவற்றை நிரப்புக.

உதவி : மூன்று பக்கங்களும் சமனாயின் சமபக்க முக்கோணி
இரண்டு பக்கங்கள் சமனாயின் இருசமபக்க முக்கோணி
மூன்று பக்கங்களும் சமனற்றதாயின் சமனில்பக்க முக்கோணி





b) மேற்குறித்த பாய்ச்சற் கோட்டுப்படத்திற்கான போலிக்குறிமுறையை எழுதுக?

c) மேற்குறித்த பாய்ச்சற்கோட்டுப் படத்தை பயன்படுத்திமுக்கோணியின் மூன்று பக்கங்கள் 5cm,5cm,3cm ஆகியன தரப்பட்டுள்ளபோது நடைபெறும் நிறைவேற்றுகையிற்கான படிமுறைகளை எழுதுக?

# ங்குச்சந்தை அலுவலகத்தில்
# யங்கரவாதிகள் தாக்குதல்!


## பத்து பேர் உயிரிழப்பு • வெடிபொருட்கள் மீட்பு











த்)

ங்குச் சந்தை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி
ரிழந்துள்ளனர். இந்த தாக்குதலின் சுற்றிவளைப்பின் போது,
தாரிகளை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் நான்கு பாதுகாப்பு காவலர்கள், ஒரு துணை பொலிஸ் அதிகாரி மற்றும் பொதுமக்களில் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் போது, ஏ.கே.47 துப்பாக்கிகள், கைக்குண்டுகள், துப்பாக்கி ரவைகள். பிற வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

துப்பாக்கிதாரிகள், நீண்ட முற்றுகைக்குத் திட்டமிட்டு. பங்குச் சந்தை அலுவலகத்தை தாக்கியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

உயர் பாதுகாப்பு மண்டலத்தில் உள்ள இந்த கட்டடத்தில் பல தனியார் வங்கிகளின் தலைமை அலுவலகங்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(2)


# னங்களுடனான
# ங்கள் இரத்து

## அரசு அறிவிப்பு

் மகாத்மா
ரிகளுக்காக
சய்திருந்த
து செய்துள்

தில வீதிப்
த் கிஷோர்
் கங்கை
ாலைவுக்கு
ப்பந்தத்தை
ங்கி இருந்

ளும் சீனா
ரியரிங் கம்
ஜ் கம்பனி
டு வைத்து
இருந்தன.
நிறுவன
சயற்படுத்த
இரு நிறுவ
பந்தத்தை
டும் புதிதாக
தெரிவித்து



ள்ளார்.

இந்தியா - சீனா எல்லைப்பிரச்சினை காரணமாக இந்திய இராணுவ வீரர்கள் 20 பேர் உயிரிழந்துள்ள நிலையில், சீனாவின் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பல மாநிலங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்நிலையில் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பீகார் மாநில அரசு தெரிவித்துள்ளது. (2)

# கொரோனா தாக்கும் என்ற அச்சம் பிரித்தானிய மக்களிடம் வேண்டும்

## தளர்வு குறித்து பிரதமர் போரிஸ் ஜோன்சன்

(லண்டன்)

கொரோனா வைரஸ் இன்னும் பிரித்தானியாவில் அழியவில்லை என்பதை மக்கள் உணர வேண்டும் என்று பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளில் ஊரடங்கு அமுலில் உள்ளது.

பிரித்தானியாவிலும் ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில். அங்குள்ள மக்கள் சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமல் கடற்கரைகளிலும் தெருவோர கேளிக்கைகளிலும் ஈடுபடுவதாக புகார் எழுந்துள்ளது.

தெற்கு இங்கிலாந்தில் உள்ள போர்ன்மவுத் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் நேற்று முன்தினம் குவிந்த ஆயிரக்கணக்கான மக்களே இதற்கு உதாரணமாக அமைந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் பிரித்தானியா ஊரடங்கை தளர்த்தவுள்ளது. இதனால் விதிமுறைகள் பறக்கவிடப்பட்டு கொரோனா பரவல் மேலும் தீவிரமாகும் என அரசு அச்சம் அடைந்துள்ளது.

ஏற்கனவே ஊரடங்கு தளர்வு கூடாது என்று உலக சுகாதார அமைப்பு மற்றும் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

இதையடுத்து லண்டனில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் போரிஸ் ஜோன்சன், ஜூலை 4 இல் தான் தளர்வுகள்



என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

விதிமுறைகளை பின்பற்றி கொரோனாவை வெல்ல வேண்டும். கொரோனா என்னைத் தாக்காது என்று இளைஞர்கள் சிலர் நினைக்கலாம்.

அது உண்மையாக கூட இருக்கலாம். ஆனால் உங்கள் மூலம் முதியவர்களை தாக்கலாம்.

கொரோனா இன்னும் வெளியில்தான் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும், அது இன்னும் அழியவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

**10**

**கலாநிதி முருகர் குணசிங்கம்**

### தமிழ் ஈழமே தீர்வு - வட்டுக்கோட்டைத் தீர்மானம்

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள வட்டுக் கோட்டையில் மகாநாடு ஒன்று கூட்டி தமிழர்களுக்குத் தமிழ் ஈழமே ஒரே தீர்வு என்ற தீர்மானத்தை ஏகமன தாக நிறைவேற்றினர்.

1976 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி நாடாளுமன்ற விவாதத்தின் போது செல்வநாயகம் கீழ்க்கண்டவாறு தமிழர்கள் நிலைப்பாட்டை முன் வைத்தனர்.

"கூட்டு ஆட்சி அரசியல் அமைப்புக்கான கோரிக்கையை நாம் கைவிட்டு விட்டோம். சிங்கள மக்கள் ஒரு நாள் எமது தமிழ் ஈழக்கோரிக்கையை ஏற்றுக் கொள்வார்கள் என்பதும் நாம் எமக்கென தனியான எமது தேசத்தை இத்தீவின் ஏனைய பகுதிகளில் இருந்து பிறிதாக நிறுவுவோம் என்பதும் எமக்குத் தெரியும்"

வட்டுக்கோட்டை மகாநாட்டுத் தீர்மானமும் செல்வநாயகத்தினுடைய மேற்கூறப்பட்ட நாடாளுமன்றப் பேச்சும் சிங்கள இனவாத அரசை மிகவும் உலுக்கிய நிகழ்வாக அமைந்தன என்பதனைத்தொடர்ந்து வந்த அவர்களின் நடவடிக்கைகள் தெளிவாகக் காட்டின.

1977 இல் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. மொத்தம் இருந்த 168 தொகுதிகளில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவைத் தலைமையாகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி 139 தொகுதிகளைக் கைப்பற்றி பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசை அமைத்தது.

ஏனைய சிங்களக் கட்சிகள் மிக மோசமான தோல்வியைத் தழுவிக் கொண் டன. அதிதீவிர சிங்கள பௌத்த தீவிர வாதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழக் கோரிக்கையைத் தமது தேர்தல் பிரகடனத்தில் முன்வைத்துப் போட்டியிட்டது. அதன் பிரதிநிதிகள் வட மாநிலத்தில் பதினான்கு தொகுதிகளிலும் வெற்றி பெற்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் பதினொரு தொகுதிகளில் நான்கு இடங்களில் வெற்றி பெற்றார்கள். நாடாளுமன்ற அமர்வின்போது அ.அமிர்தலிங்கம் கீழ்க்கண்டவாறு பேசியமை மிகவும் முக்கியம் வாய்ந்தது.


"சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக உழைத்து தமிழ் ஈழத்தை நிறுவுவதற்காகவே தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அந்தத் தேசியப் பேரவைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்."

ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள மக்கள் வழங்கிய அமோக ஆதரவின் விளைவாக இறுக்கமான சிங்கள பௌத்த தேசியவாதச் சித்தாந்தங்களுக்குள் மூழ்கி ஜெயவர்த்தனவின் தலைமையின் கீழ் மிகவும் மமதை அடைந்து இருந்ததோடு தமிழ் இன அழிப்பை நடத்தி முடிக்க வேண்டும் என்ற இனவெறி மேலிட்டவர்களாகவே காணப்பட்டார்கள்.

1977 இற்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் இக்கூற்றை உணர்த்தின.

1977 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் இடம்பெற்ற களியாட்ட விழாவில் தமிழ் மாணவர்களுக்கும் சிங்களக் காவல்துறையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலால் இலங்கையின் தெற்கு மாகாணங்களில் இனக் கலவரம் வெடித்தது.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் தாக்கப்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர். தமிழர்களின் வீடுகளும் வணிக நிறுவனங்களும் தீயிடப்பட்டன. அவர்களின் உடைமைகளைச் சிங்களவர் கொள்ளை அடித்தனர். இக்கலவரங்களில் மலையகத் தோட்டத் தொழிலாளரான தமிழ் மக்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர்.



1956, 1958களுக்குப் பின்னர் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட மூன்றாவது இனக்கலவரமாக இது அமைந்தது. சிங்களப் பகுதிகளில் இருந்தும் மலையகத்தில் இருந்தும் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அவர்கள் பாதுகாப்புத் தேடி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அகதிகளாகச் சென்றனர்.

இந்த வன்முறை வெறியாட்டங்கள் தமிழ் இளைஞர்களின் விடுதலை வேட்கையில் மேலும் எண்ணெய் ஊற்றின. வடக்கு, கிழக்கு பிரதேசம் தமிழ் மக்களின் தாயகம் என்பதையும் சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கும் உலகத்திற்கும் பறைசாற்றிய நிகழ்வாக மேற்படி இனக் கலவரங்கள் எடுத்துக் காட்டின. இதுவே தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்களின் எழுச்சியை வெகுவாக ஊக்குவித்தது.

பல விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற வரலாறாகவே 1977களின் பின்னர் உள்ள தமிழர் வரலாற்றைப் பார்க்க முடிகின்றது. சிங்கள அரசு ஆயுத பலத்தினாலும் அடக்குமுறையாலும் சட்டதிட்டங்களாலும் தமிழ் இளைஞர்களின் விடுதலை வேட்கையை அடக்கிவிட முனைப்புடன் செயற்பட்டது. இதே காலகட்டத்தில் ஜனாதிபதி முறை அமுல்படுத்தப்பட்டு ஜெயவர்த்தன அதிக அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தன்னை ஆக்கிக் கொண்டார்.

1979 ஆம் ஆண்டு "பயங்கரவாதத் தடைச் சட்டம்" என்னும் மசோதாவை சிங்கள அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களை எதுவித விசாரணையும் இன்றி 18 மாதங்களுக்குத் தடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கியது.

அதன்படி பல ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் இலங்கை இராணுவத்தினால் கைது செய்து சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்யப்பட்டனர். ஆயிரமாயிரம் இளம் தலைமுறையினர் தமிழ் ஈழ விடுதலை அமைப்புகளில் இணைந்து போராடினார்.

அவற்றுள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், மக்கள் இயக்கமாகவும் பல ஆயிரக்கணக்கான தமிழ்ப் போராளிகளை உள்வாங்கி சிங்கள முப்படைகளுக்கும் அவர்கள் தாக்குதல்களுக்கும் பதிலடி கொடுக்கும் இயக்கமாக வலுப் பெற்றது. சிங்கள முப்டைகளுக்குச் சமபலத்துடன் முப்படைகளைக் கொண்ட இயக்கமாக விடுதலைப் புலிகள் இயக்கம் வளர்ந்தது.

"மாவட்ட அபிவிருத்தி சபை"களை அமைப்பதன் மூலம் தமிழரைத் திருப்திப்படுத்தலாம் என ஜெயவர்த்தன எண்ணினார். இதற்குத் தமிழ் இளைஞர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போயிற்று. இதன் பின்னணியில் 1981 ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் கலவரம் வெடித்தது. தமிழர்களின் வரலாற்றுக் கருவூலமான 95, 000 அரிய நூல்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் ஓலைச் சுவடிகளையும் கொண்ட யாழ்.பொது நூலகம் சிங்களப் படையினரால் தீ வைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கப்பட்டது.

மேலும் செய்தித்தாள் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், கலாசார மையங்கள் போன்றவையும் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

### 1983 ஜூலை இனக்கலவரம்

மேற்படி நிகழ்வுகளைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புகள் பல்வேறு வடிவங்களில் சிங்கள அரசினாலும் சிங்களக் காடையர்களாலும் சிங்களப் படையினராலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் தமிழருக்கு எதிரான தாக்குதல்களும் இன அழிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

இலங்கைத் தலைநகராகிய கொழும்பிலும் ஏனைய சிங்களப் பிரதேசங்களிலும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழர்கள் வாள்களால் வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் தீ வைத்து எரித்தும் கொல்லப்பட்டனர்.

தமிழ்ப் பெண்கள் நடுவீதியில் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். "பல மில்லியன் பெறுமதியான தமிழர்களின் வணிக நிறுவனங்கள், கடைகள், தொழிற்சாலைகள் உடைத்துக் கொள்ளை அடிக்கப்பட்டதுடன் தீவைத்தும் கொளுத்தப்பட்டன. தென்னிலங்கையில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அகதிகளாகத் துரத்தப்பட்டனர்.

அவ்வாறு ஓர் இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் ஏதிலிகளாக ஆக்கப்பட்டனர். நாற்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கடல் கடந்து தமிழகத்திற்கும் உலகின் பல நாடுகளுக்கும் சென்று அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

இதனை அடுத்து முக்கிய நிகழ்வாக இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்றுச் சத்தியப் பிரமாணம் செய்யத் தவறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடும் என்ற அரசியல் அமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சத்தியப் பிராமணத்தைச் செய்ய மறுத்தனர். அவர்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பை இழந்தனர். அவர்களுள் பலர் தமிழ் நாட்டில் அடைக்கலம் பெற்றனர்.

(தொடரும்)



# ஆன்மீகம்

## மனிதன் மனிதனாக வேண்டும்!

பலர் இப்போதெல்லாம் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். எங்கள் குடியிருப்பில் எட்டுக் குடும்பங்கள். யாரையும் எனக்குத் தெரியாது. சக மனிதர்களின் சந்தோஷத்திலும் துயரத்திலும் பங்கு கொள்ளாமல் இயல்பாகவும் கலகலப்பாகவும் பேசி மகிழாமல் என்ன மனித வாழ்க்கை?

காக்கையை "காக்கா" பிடித்தால் கூட வாழ்க்கையை நாம் கற்றுக் கொள்ளலாம். ஆகாரம் கிடைத்தால் தான் மட்டும் உண்டு ஆனந்தம் அடையாமல் தன் இனத்தைக் கூப்பிட்டு சேர்ந்து உண்கிறது காகம்.

"காக்கை கரவா கரைந்து உண்ணும்" என்கிறார் திருவள்ளுவர். சாப்பாடு கிடைத்தால் மட்டும் காகங்கள் ஒன்று சேர்வதில்லை. துன்பம் வந்தாலும் ஒன்றாகக் கூடும். ஒரு காகம் இறந்து விட்டால் அவ்விடத்தில் துன்பத்தில் பங்கேற்று பல காக்கைகள் ஒன்றுகூடிக் கரைவதை நாம் பார்க்கலாம்.


காக்கா கூட்டத்தைப் பாருங்க! -
அதுக்கு
கத்துக் கொடுத்தது யாருங்க!
ஒன்னா இருக்க கத்துக்கனும்!
இந்த உண்மையைச் சொன்னா
ஒத்துக்கனும்!

சின்னச் சின்ன தீவுகளாக மனிதன் சின்னாபின்னமாகாமல் கூடி வாழ்ந்தால் தானே மனித குலத்திற்குக் கோடி நன்மை விதியில் வாழ்ந்தால் தானே மனித குலத்திற்குக் கோடி நன்மை விதியில் செல்லும் போது நாம் அறிந்த ஒருவரைப் பார்த்தால் முந்திக்கொண்டு முதலில் நலம் விசாரித்து இங்கிதமாகப் பேச வேண்டும். பழக வேண்டும்.'

இத்தகைய அருமையான பண்பை நம் புராணம் பூர்வ பாஷி & மிருது பாஷி என்று குறிப்பிடுகிறது. பூர்வ பாஷி என்றால் முதலில் உரையாடுபவன் என்றும் மிருது பாஷி என்றால் இனிமையாக உரையாடுபவன் என்றும் பொருள். சக்கரவர்த்தி திருமகனாக விளங்கிய ராமர் இப்படி நடந்து கொண்டார் என கம்பரின் காவியம் கூறுகிறது. அயோத்தியின் வீதியில் ராம லட்சுமணர்கள் சென்று கொண்டிருக்கும் போது ஊர் மக்கள் பலரைக் காண்கிறார்கள். தான் மன்னரின் மகன். அடுத்து அரியணையில் அரசனாக அமரப் போகிறவன் என்ற ஆணவம் சிறிதும் இன்றி ராமர் முந்திக் கொண்டு பலரையும் நலம் விசாரிக்கிறார் என்கிறார் கம்பர்.

"எதிர் வரும் அவர்களை எமையுடை
இறைவன்
முதிர் தரு கருணையின் முகமலர் ஒளிர
எது வினை? இடர் இலை? இனிது நும்
மனையும்
மதி தரும் குமரரும் வலியர் கொல்?

பூதான இயக்கம் கண்ட வினோபாஜி ஒருநாள் மாணவர் பலருடன் கலந்துரையாடல் நிகழ்த்திக்கொண்டிருந்தார்.



பல துண்டுகளாகக் கிழிக்கப்பட்ட தேச வரைபடம் ஒன்றின் எல்லாத்துண்டுகளையும் மாணவர்களிடம் ஒப்படைத்து இதைச் சரியாக்கி ஒட்டித் தாருங்கள். உங்களுக்கு ஒப்பற்ற பரிசு ஒன்று தருகிறேன் என்று சொன்னார்.

காகிதத் துண்டுகளை வாங்கிக் கொண்டு மாணவர்கள் ஒன்று சேர்ந்து தேச வரைபடத்தை சரியாக்க முயன்றனர். மேல்நோக்கியும் கீழ் நோக்கியும் வளைந்து நெளிந்தும் கோணலாகவும் நேராகவும் வெறும் கோடுகள் தான் காகிதத்துண்டு ஒவ்வொன்றிலும் காட்சி அளித்தது.

இது இப்படி அது அப்படி என்று வைத்து பலமுறை முயன்றும் பயனில்லை. அப்பொழுது ஒரு மாணவன் சொன்னான் எல்லாவற்றையும் என்னிடம் தந்தால் ஐந்தே நிமிடத்தில் தேச வரைபடத்தை நான் சரியாக்கிக் காட்டுகிறேன். அப்படியா? உன்னால் முடியுமா? என்றபடி அவனிடம் அனைத்துத் துண்டுகளையும் ஒப்படைத்தனர்.

சொன்ன ஐந்து நிமிடத்திற்கு முன்பாகவே செயல்புரிந்து விட்டான் அந்த மாணவன். வியப்பால் அனைவர் விழிகளும் விரிந்தன. வினோபாஜி ஒப்படைக்கப்பட்ட வரைபடத்தால் ஒப்பற்ற மகிழ்வடைந்து உன்னால் மட்டும் எப்படி முடிந்தது? என்று அந்த மாணவனை நோக்கிக் கேட்டார்.

ஐயா! துண்டுகளை மாற்றி மாற்றி ஒட்டிக்கொண்டிருக்கும் போது ஒன்றை நான் கவனித்தேன். காகிதத்துண்டுகளின் பின்புறம் கண் காது போன் உறுப்புக்களின் படம் தெரிந்தது. எனவே வரைபடத்தின் பின்பக்கம் மனித உருவம் தான் இருக்கும் என்று யூகித்தேன். அதனால் நான் அனைத்துத் துண்டுகளையும் திருப்பி வைத்து மனித ஓவியத்தைப் பொருத்தினேன். முன்பக்கம் தேச வரைபடம் சரியாகி விட்டது. வினோபா புன்னகை பூத்தார்.

ஒவ்வொரு மனிதனும் ஒழுங்காக தேசம் தானே சரியாகிவிடும் என்று புரிகிறதல்லவா?

(தொடரும்...)

# நயினை நாகபூஷணிக்கு இன்று 11ஆம் திருவிழா



### வரம் தருவாள் சக்தி

மணிபல்லவத்திலே
அலைகடலும் தாலாட்ட
அரவமது குடைபிடிக்க
அகிலத்தைக் காத்து வரும்
அகிலாண்ட நாயகியே
அசுரர்களை அழித்திட்டு
தேவர்களைக் காத்திட்ட தேவியே
கொரோனா என்ற வைரஸினால்
எம் இனத்தைக் காத்திட
நாக பூஷணியே வருவாயா

இடைக்காடு,
க. செல்வமலர்

### கடைவிழி காட்டு

நாகம் வந்து மலர் வைத்து
மாண்புற உன் அடி வணங்க
ஏகன் இடம் கொண்டதாயே
எண்ணில் வரம் பொழிவாயே
மேகம் பொழி மழையாக
தேகம் மண்ணில் வீழ்வதுவோ
ஆகும் உன்னால் அனைத்துமே
கடைவிழிகாட்டு நோய்விலக

திருமதி ஜெ. கந்தவேள்
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

### பொல்லா வினைகள் தீர்த்திடம்மா

அடியார் துணையே அருணோதயமே
அருவாய் உருவாய் அருவுருவானவளே
ஆதாரம் நீதானம்மா ஆறுதல்
சொல்வாயம்மா
காற்றிடை பஞ்சுபோல கொடிய
கொரோனாவால்
கலங்கித் தவித்தோமம்மா
காத்தருள வேண்டுமம்மா
ஐந்து லட்சம் அடியவர்கள்
அலைமோதி வரும் வேளை
ஐம்பது பேராகி உன்னை வணங்கும்
நிலை வந்ததுவோ
பொல்லா வினைகள் தீர்த்திடம்மா எம்மை
புண்ணிய நெறியில் சேர்த்திடம்மா
எல்லாம் இங்குன் நடப்பம்மா
எங்களை காப்பதுன் பொறுப்பம்மா

கலாபூஷணம் க. லோகேஸ்வரன்
தொல்புரத்தூர்.

## கொரோனாவை வெற்றி கண்ட இலங்கைக்கு தடை விதித்த ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தொற்றில் வெற்றி பெற்றதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கையின் பெயரை உள்ளடக்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. நாளை முதலாம் திகதி முதல் ஐரோப்பிய சங்கம், உலகின் 54 நாடுகளுக்கு மக்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரையில் உலகின் பாரிய கொரோனா நோயாளர்கள் உள்ள இந்தியா உட்பட 54 நாடுகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் இலங்கை அந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. பூட்டான், கோஸ்டாரிக்கா, நெம்பியா, ருவாண்டா, டொமினிக், முருசி, கியூபா, உகாண்டா, எதியோப்பியா ஆகிய நாடுகள் இந்த பட்டியலில் உள்ளடக்கப்படாத நிலையில் இலங்கையும் அதில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-8)

## முகக்கவசம் அணியாத 1,214 பேர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்கள் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவரென பொலிஸ் தலைமையகம் நேற்று முன்தினம் அறிவித்திருந்த நிலையில், மேல் மாகாணத்தில் முகக் கவசங்கள் அணியாமல் சுற்றித் திரிந்த ஆயிரத்து 214 பேர் கைது செய்யப்பட்டு, 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (8)



## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்
### 14 மாத சிகிச்சையின் பின் வீடு திரும்பிய பெண்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் காயமடைந்த பெண்ணொருவர் 14 மாதங்கள் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

36 வயதான திலின ஹர்ஷினி என்ற 3 பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு வீடு திரும்பியுள்ளார். நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி தேவாலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் இவர் காயமடைந்திருந்தார்.

இவர் ஒரு நடன ஆசிரியராவார்.

தாக்குதலில் இவருக்கு முள்ளந்தண்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய போதிலும் பூரண குணமடையவில்லை.

சில பகுதி உணர்வற்றிருப்பதாக தெரிவித்துள்ளார். இடது கண் அகற்றப்பட்டுள்ளது. விரல்கள் சரியாக செயற்படாமலுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது, அவரும் மூன்று பிள்ளைகளும் தேவாலயத்தில் இருந்தனர். அவரது ஆறு வயதுடைய இரண்டாவது மகன் தாக்குதலில் உயிரிழந்தார். மற்றப் பிள்ளைகளும் காயமடைந்து, தற்போது குணமடைந்துள்ளனர்.

பலத்த காயங்களுடன் ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் இப் பெண் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் பல அறுவைச் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-8)

## விபத்தில் 9 பேர் காயமடைந்தனர்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பின்னதுவ மற்றும் பத்தேகமவுக்கிடையில் 92.5 ஆம் மைல்கல் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 9 பேர் காயமடைந்து காலி-கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வான் ஒன்றின் பின்னால் பயணித்த தனியார் பேருந்து வான் மீது மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், வானில் பயணித்தவர்களே காயமடைந்துள்ளதாகவும் பின்னதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் அம்பந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற பயிற்சி வேலைத் திட்டம் ஒன்றுக்காக வானில் பயணித்த வேளை இவ் விபத்து இடம் பெற்றது. (2)

## துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பாதாள உலகக்குழுக்களின் பயன்பாட்டில் இருந்த ரி-56 ரக துப்பாக்கிகள் 12 மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம- பிடிபன பகுதியில் திடீர் சுற்றிவளைப்பினை விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போதே பிட்டிபன பகுதியில் வைத்து பாதாள உலகக்குழ உறுப்பினராக தற்போது சிறையிலுள்ள ககன எனும் நபரின் உதவியாளர் ஒருவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக ஹோமாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எலெக்ட்ரோனிக் புத்தகங்கள்!

ஒரு எழுத்தாளர் மிகவும் கவலையோடு வந்தார். "என் எழுத்தினுடைய மதிப்பை இந்த மக்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்கிறார்கள் சேர்"என்றார். "ஏன் அப்படி சொல்கிறீர்கள்?" என்றேன்.

"இதுவரைக்கும் 20 புத்தகம் எழுதியிருக்கேன். எல்லாம் மளிகைக் கடையில் தான் இருக்கு-கிழித்து பொட்டலம் கட்டுவதற்கு" என்றார்.

அது எப்படி மளிகைக் கடைக்குப் போய்விட்டது?" என்றேன்.

"எல்லாம் எடை போட்டு விற்றிருக்கிறார்கள் சேர்" என்றார்.

உங்கள் எழுத்தினுடைய வெயிட் என்ன என்பது படித்தவர்களுக்கு தெரிந்திருக்கும் சேர்.அது தான் எடை போட்டு விற்றிருக்கிறார்கள் என்றேன். ரொம்ப வேதனையோடு சிரித்தார். பழைய பேப்பர் கடையிலே போட முடியாதளவிற்கு ஒரு புத்தகம் எழுதிக் காட்டுகிறேன் என்றார்.

"அது நிச்சயம் உங்களாலே முடியும்" என்றேன். எப்படி? என்றார்.

"இன்னும் கொஞ்ச நாளிலே எலெக்ரோனிக் புத்தகங்கள் வரப் போகிறது. அதையெல்லாம் அவ்வளவு சுலபமாக கடையில் போட்டு விடமுடியாது. பொட்டலம் கட்டவும் உபயோகப்படாது" என்றேன். அவருக்கு மிகவும் சந்தோசம் விபரம் கேட்டார் சொன்னேன். கணனியிலே கதை படிக்கின்ற காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. புத்தகம் தலையணை மாதிரி இருக்கே. இதை எப்படி தூக்கிக்கொண்டு போகிறது என்கின்ற கவலையெல்லாம் வேண்டாம். பெரிய பெரிய அகராதி கலைக்களஞ்சியம் எல்லாவற்றையும் கணனி சிப்களிலே பதிவு பண்ணி வைக்கலாம். இதேமாதிரி இப்ப நாவல்களையும் கொண்டு வருகிறார்கள். அதுக்கான ஏற்பாடு இப்பொழுது அமெரிக்காவிலே நடந்து கொண்டிருக்கு.

கணனி கதை படிக்க வேண்டும் என்றால் அதற்கு அடிப்படையாக மூன்று விடயங்கள் தேவையாம். ஒன்று கையிலே எடுத்துக் கொண்டு போவதற்கு வசதியாக ஒரு குட்டி கணனி. இரண்டாவது கணனியிலே கதையைப் படிக்க உதவுகின்ற சொப்ட்வெயார். மூன்றாவது டிஸ்க்குகள் அவ்வளவு தான். கதை டிஸ்க்கை செருக வேண்டியது. உடனே கணனி திரைக்கு உயிர் வந்துவிடும்.

வழக்கமாக பச்சை நிறத்திலெ சாம்பல் நிறத்திலே திரை தெரியும் அல்லவா. இதிலே அப்படி இல்லை. புத்தகம் மாதிரியே இருக்கிறதுக்காக வெண்திரை தெரியும். அதிலே நரவலின் ஒரு பக்கம் தெரியும். அதை படிக்க வேண்டியது. படித்து முடித்தவுடன் ஒரு பொத்தானை அழுத்தினால் பக்கம் மாறும். தேவைக்குத் தகுந்த மாதிரி பக்கங்களை முன்னே பின்னே கூட திருப்பிப் பார்க்கலாம். புத்தகத்திலே செய்கிறது மாதிரியே அதுவரைக்கும் படித்த பக்கம் ஞாபகத்திலே இருக்கிறதுக்காக பக்கத்தின் ஒரு மூலையை மடித்து வைக்க வேண்டுமா? வைத்துக் கொள்ளலாம். அதற்கென்று ஒரு பொத்தான் இருக்கு. அதை அழுத்தினால் திரையிலே தெரிகின்ற பக்கத்தின் மூலையை மடக்கி வைத்துக் கொள்ளலாம். அல்லது ஒரு எலெக்ட்ரோனிக் கிளிப்பைச் செருகி புக்மார்க் மாதிரி உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

புத்தகத்திலே அடிக்குறிப்பு ஏதாவது போட்டிருக்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை அந்த பக்கத்திலேயே வரவழைத்துப் பார்த்துக் கொள்ளலாம். வீட்டிலே விளக்கெல்லாம் அணைத்து விட்டால் கூட பக்கத்திலே தூங்கிறவர்களுக்கு தொந்தரவே இல்லாமல் நாங்கள் கதை பார்த்துக் கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட வார்த்தை இந்த நாவலிலே எத்தனை தடவை வந்திருக்கிறதென்று நொடியிலே கண்டு பிடித்துவிடலாம். படிப்பதற்கு சலிப்பு ஏற்படுகிறதா? கெட்உள்ள குறிப்பை வரவழைத்துப் பாத்துக் கொள்ளலாம்.

ஹெட்போனை எடுத்து மாட்டிக் கொள்ளலாம். காதிலே அது கதை சொல்ல ஆரம்பித்துவிடும். கதையோடு சேர்ந்து அப்பப்ப படங்களும் பார்க்கலாம். சினிமா மாதிரி காட்சிகளும் இதிலே ஓடும். இப்பெல்லாம் நடந்து கொண்டு காதிலே மாட்டிக் கொண்டு பாட்டுக் கேட்டுக் கொண்டு போகின்றோம் அல்லவா- வோக்மேன். அது மாதிரி இதற்கு புக்மேன் என்று பெயர் கொடுத்திருக்காங்களாம். எல்லாம் சரி.

இயந்திரம் வளருகின்ற அளவுக்கு சிந்தனைகள் வளர வேண்டுமே. அப்போதுதானே நல்ல புத்தகங்கள் எல்லாம் வர முடியும்! அது எப்படி வருவது? நான் சொல்லிக்கொண்டு வந்த இவ்வவு விபரத்தையும் எதிரிலே இருந்த எழுத்தாளர் கேட்டுக் கொண்டு வந்தார்.மிகவும் சந்தோசம் சேர் என்றார். பின்பு ஒரு சந்தோசமான சமாச்சாரம் சேர் என்றார். என்ன? என்று கேட்டேன். "இந்த வருடம் சிறந்த இலக்கிய சேவை செய்ததுக்கான இலக்கிய விருது எனக்குத்தான் சேர் கொடுத்திருக்கிறார்கள்" என்றார் மிகவும் அடக்கமாக. அப்படியா. சொல்லவே இல்லையே.அதுசரி.

இந்த வருடம் புதுசா புத்தகம் எதுவும் நீங்க எழுதவில்லை போல் இருக்கின்றதே. என்றேன்."ஆமாம் சேர். நான் எதுவும் எழுதவில்லை அப்படி. எழுதாமல் இருந்ததே இலக்கியத்திற்கு நான் செய்த பெரிய சேவையாக கருதி இந்த விருது வழங்குகிறதாக அதை என் கையிலே கொடுக்கிற பொழுது சொன்னார்கள்" என்றார்.

# 25 ஆயிரம் கோடி வீண் செலவு; மாகாணசபை முறையை நீக்குங்கள்

## மிலிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளை ஒழிப்பது பற்றி அரசியல் கட்சிகள் தீவிரமாக சிந்திக்க வேண்டுமென முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட கேட்டுக் கொண்டுள்ளார். வருடாந்தம் 25 ஆயிரம்கோடியை மாகாண சபைகளுக்காக செலவிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதன் மூலம் மாகாணசபை முறைமையை ஒழிக்கலாம். இதை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குவது குறித்து அரசியல் கட்சிகள் தீவிரமாக சிந்திக்க வேண்டும். இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன், 1987 ஆம் ஆண்டு மாகாணங்களிற்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் நோக்கத்துடன் 13 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது.

ஆனால் அது மிகையான, சுமையான, அதி செலவான, பயனற்றதாக மாறிவிட்டது. மாகாண சபைகளை ஒழித்த பின்னர், உள்ளாட்சி அதிகாரிகளை வலுப்படுத்த முடியும். மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவை மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு உதவும் நெருக்கமான நிர்வாக கட்டமைப்புகளாக பராமரிக்கப்படலாம். மாகாண சபைகள் ஒழிக்கப்பட்டு செனட் அமைப்பாக மாற்றப்பட்டால், அவை பிளவுகளை அகற்ற ஒரு நிபுணர் குழுவாக செயற்படும். மாகாண சபைகள் கலைக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகி, மாகாணசபைகள் செயலற்ற நிலையில் உள்ளன. (2-8)

# ஊரடங்கு தளர்வு; ஜனாதிபதி விளக்கம்

கொழும்பு

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் கடந்த இரண்டு மாதங்களாக சமூகத்தில் பரவுவது பூச்சியமாகக் காணப்பட்டமையினாலேயே ஊரடங்கை தளர்த்துவதற்கு தீர்மானித்ததாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டதையடுத்து, கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு வந்தது. மே மாதம் வரையில் முழு ஊரடங்கும் பின்னர் தளர்வுகளுடன் கட்டம் கட்டமாக ஊரடங்கு அமுலாக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நாட்டில் ஊரடங்கு முழுமையாக தளர்த்தப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்தது.

இந்நிலையில் இது குறித்து சமூக வலைத்தளமான டுவிட்டரில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி, இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் கடந்த இரண்டு மாதங்களாகப் பூச்சியமாகக் காணப்பட்டமையினாலேயே, ஊரடங்கை தளர்த்துவதற்குத் தீர்மானித்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும் மக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். அதேநேரம் பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், கைகளைச் சுத்தப்படுத்துதல் போன்ற விடயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும் பொறுப்பாகவும் பாதுகாப்பாகவும் இருக்குமாறு வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி, ஏனையவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-8)

## 826 கடற்படையினர் குணமடைவு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 3 கடற்படையினர் பூரணமாக குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 826 கடற்படையினர் இதுவரையில் பூரணமாகக் குணமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களில் தற்போது வரை 1661 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

மேலும் நாட்டில் 2037 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# அரச பணியாளர்கள் சேவை சமுகமளிக்கின்ற நேரம் மறுசீரமைப்பு

(கொழும்பு)

அரச பணியாளர்கள் சேவைக்கு சமுகமளிக்கின்ற நேரத்தை மறுசீரமைப்பு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இதன்படி, இத்துத்தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு மேலதிக செயலாளர் ஒருவர் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இது தொடர்பான அறிக்கை அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளது. பாடசாலைகள் மீள ஆரம்பித்துள்ள நிலையில், வாகன நெரிசல் மற்றும் சமூக இடைவெளியை பேணுவது தொடர்பான சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவின் ஆலோசனைக்கு அமைய, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (8)

# வியாபாரிகளுக்கு வங்கிக் கடன் வழங்கல் புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானம்

## மத்திய வங்கி நடவடிக்கை

(கொழும்பு)

கொவிட் - 19 காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வியாபாரங்களுக்காக கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவித் தொகைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையின் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடுமையாக பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு வங்கிகளின் கடன் வழங்கலை துரிதப்படுத்துவதற்கு ஒரு கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுத் தொகைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அறிவிக்கப்பட்ட 150 பில்லியன் ரூபா வரையறையினுள் சௌபாக்யா கொவிட் - 19 மறுமலர்ச்சி வசதி மற்றும் நாணயவிதிச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட புதிய கடன் வசதிகளும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-8)

# செய்தித்துளிகள்

## ஓமானிலிருந்து 288 பேர் நாட்டிற்கு வருகை

(கொழும்பு)

கொரோனா வைரஸின் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்கள் நாட்டிற்கு கட்டம் கட்டமாக அழைத்து வரப்படுகின்றனர்.

அதற்கமைய நாட்டிற்கு திரும்ப முடியாது ஓமான் நாட்டில் சிக்கித் தவித்த 288 பேர் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் விசேட விமானத்தின் மூலம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

இதனையடுத்து அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் அவர்களை விமான நிலையத்திற்கு அண்மையில் உள்ள ஹோட்டல்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹொங்கொங்கிலிருந்து நேற்று முன்தினம் இரவு 26 பேர் தாயகம் திரும்பியுள்ளதுடன், அவர்களும் பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளுக்காக ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (2-8)

## சுற்றிவளைப்புகளில் 408 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 5 மணி வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் 408 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் போதை பொருளுடன் 173 பேரும், ஐஸ் ரக போதை பொருளுடன் 15 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 199 பேர் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-8)

## நீரில் மூழ்கி சிறுவன் பலி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனை பொலிஸ் பிரிவு, புளியத்துறையில் குடும்பத்தோடு நீராடச்சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பௌசல் பாகிம் (வயது-17) என்பவரே உயிரிழந்துள்ளார்.


நீண்ட நேரத்திற்குப் பின்னரே ஆற்றிலிருந்து சிறுவனின் உடல் மீட்கப்பட்டது. (2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 40 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 120 | 150 | 200 |
| தக்காளி | 250 | 220 | 200 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 110 | 100 |
| கோவா | 160 | 130 | 130 | 140 |
| கரட் | 140 | 180 | 180 | 200 |
| பூசணி | 50 | 35 | 40 | 40 |
| புடோல் | 80 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 90 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 250 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 75 | 80 | 80 |
| பாகற்காய் | 250 | 230 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 180 | 150 | 120 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 | 150 |
| பீற்றூட் | 100 | 120 | 80 | 120 |
| கறிமிளகாய் | 150 | 200 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 280 | 200 |
| போஞ்சி | 200 | 130 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | — | 70 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 300 | 200 | 280 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 320 | 240 | — |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 40 | 50 |




## ஆகாயத்தில் அழகிய மாளிகை



ஒருநாள் மாலை நேரத்தில் அரண்மனைத் தோட்டத்தில் தென்றல் காற்றை அனுபவித்தபடி அக்பரும் - பீர்பாலும் பேசிக்கொண்டு உலவிக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் அக்பருக்கு திடீரென்று ஒருநாள் ஆசை ஏற்பட்டு பீர்பால் அவர்களே, எனக்கு ஆகாயத்தில் அழகிய மாளிகை ஒன்றைக் கட்ட வேண்டும் என்று எண்ணுகிறேன்.

அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா? என்று அரசர் கேட்டார்.

அரசரின் பேச்சைக் கேட்டதும் பீர்பால் திடுக்கிட்டார்.

என்றாலும் மன்னரிடம் எப்படி முடியாது என்று கூறுவது என்று

தயங்கியபடியே முயன்றால் முடியும் மன்னா! என்றார்.

எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை.

அதற்கான ஆக்கபூர்வமான வேலையில் இறங்கி வெகு சீக்கிரம் முடியுங்கள் என்றார் அரசர்.

மன்னரின் ஆகாயத்தில் அழகிய மாளிகை கட்டும் ஆசை எப்படி சாத்தியமாகும்.

அசட்டுத்தனமான இந்த ஆசை நிறைவேறவே வாய்ப்பு இல்லை.

ஆகையினால்இந்த வேலை முடியாதது என்பதை மன்னரே உணர்ந்து கொள்ளும்படி செய்ய வேண்டும் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான் பீர்பால்.

என்ன பீர்பால் நான் கேட்டதற்கு எந்த பதிலும் கூறாமல் மௌனமாக உள்ளீர்! என்றார்.

அரசே! ஆகாயத்தில் அழகிய மாளிகை கட்டுவதற்கு முன்னர் பல முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதனைச் செய்வதற்கே மூன்று மாதம் ஆகிவிடும்.

அதன் பின்னர் தான் கட்டடம் கட்ட முடியும் என்றார் பீர்பால்.

தாங்கள் கூறியபடியே ஏற்பாடுகளைச் செய்யுங்கள் நாளை காலை கஜானாவிலிருந்து அதற்கான பணம் வரும் என்றார் மன்னர்.

பீர்பால் கூறியபடியே மறுநாள் காலை வேடன் ஒருவன் வந்து சில கிளிகளைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

வேடன் சென்றதும் கிளிகளை ஒரு கூண்டில் அடைத்து அதற்கு சில வார்த்தைகளைப் பேசக் கற்றுக் கொடுத்தார்.

அதன் பின்னர் ஆகாயத்தில் மாளிகை கட்டும் பணிக்கு ஆட்களை திரட்டி வர வெளியூர் சென்றிருப்பதாகவும் மன்னருக்கு தகவல் சொல்லியனுப்பினார் பீர்பால்.

மூன்று மாதங்கள் முடிந்ததும் அரண்மனைக்கு வந்து அரசரை சந்தித்தார் பீர்பால்.

அரசே! ஆகாயத்தில் அழகிய மாளிகை கட்ட ஆட்களை தயார் செய்து விட்டேன்.

அவர்களை நீங்கள் வந்து பார்வையிட்டதும் வேலையைத் தொடங்கி விடலாம்! என்றார் பீர்பால்.

பீர்பால் கூறியதைக் கேட்டு மன்னர் மகிழ்ச்சியடைந்தார். ஆர்வமிகுதியால் உடனே பீர்பாலுடன் புறப்பட்டுச் சென்றார் மன்னர். கிளிகள் இருந்த அறைக்கு அரசரை அழைத்துச் சென்றார் பீர்பால்.

அந்த அறையில் அரசரும் பீர்பாலும் மட்டுமே இருந்தனர்.

அரசரைப் பார்த்ததும் கிளிகள், சுண்ணாம்பு கொண்டு வா! செங்கல்லை கொண்டு வா! சாரத்தைக் கட்டு! கல்லை இந்தப் பக்கம் போடு! சுண்ணாம்பைப் பூசு! என்று ஒவ்வொன்றும் பேச ஆரம்பித்தது.

அரசருக்கு ஆச்சரியமும், அதே சமயம் கோபமும், எரிச்சலும் ஏற்பட்டது.

பீர்பால் இது என்ன? என்றார் கடுங்கோபத்துடன்.

மன்னர் பெருமானே! என்னை மன்னிக்க வேண்டும் ஆகாயத்தில் கட்டடம் கட்ட பறவைகளினால் தான் முடியும்!

ஆகையினால் தான் இவைகள் பேசுகின்றன.

இவைகளெல்லாம் நல்ல பயிற்சி பெற்றவையாகும்.


ஆதலால் ஆகாயத்தில் மாளிகை கட்டும் வேலையை இப்போதே ஆரம்பித்து விடலாம் என்றார் பீர்பால்.

பீர்பால் கூறியதைக் கேட்டதும் மன்னருக்குப் புரிந்து விட்டது. ஆகாயத்தில் அந்தரத்தில் எப்படி மாளிகை கட்ட முடியும்.

இது நடக்க முடியாத விடயம் என்பதை நாசூக்காக நமக்கு உணர்த்துகின்றார் என்பதை புரிந்து கொண்டு புன்னகைத்தார் மன்னர்.

கட்டடம் கட்டும் தொடர்பான வார்த்தைகளை சிரமப்பட்டு பீர்பால் கற்றுக் கொடுத்ததை எண்ணி பீர்பாலை மனதாரப் பாராட்டினார் அக்பர்...

## துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி




துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி
கன்றுக் குட்டி எங்கள்
கன்றுக் குட்டி
எங்களை சுற்றி
ஓடுகிறாய்
கன்றுக் குட்டி எங்கள்
கன்றுக் குட்டி
அம்மாவின் காலை
சுற்றுகிறாய்
எங்கள் கன்றுக் குட்டி,
கன்றுக் குட்டி
மூக்கை சுழித்து
முகத்தை காட்டுகிறாய்
எங்கள் கன்றுக் குட்டி,
எங்கள் கன்றுக் குட்டி
ஆசையாய்
அம்மாவும் நாக்கால்
வருடுகிறாள்
கன்றுக் குட்டி எங்கள்
கன்றுக் குட்டி
சுகமாய் நீயும் சொக்கி
நின்றாய்
எங்கள் கன்றுக் குட்டி
எங்கள் கன்றுக் குட்டி
துள்ளி துள்ளி
குதிக்கும் உன்னை
கை கொண்டு பிடிக்க
முயற்சி செய்தால்
கைகளுக்குள்
சிக்காமல் ஓடுகிறாய்
கன்றுக் குட்டி எங்கள்
கன்றுக் குட்டி
என்னை உன்
நண்பனாக
ஏற்றுக் கொள்வாயா?

## நிறம் தீட்டுங்கள்



## கூட்டுங்கள்



உன்னிடம் யாராவது ஒரு தடவை மோசடி செய்தால், அது அவன் தவறு. அவனே மறுதடவை மோசடி செய்தால் அது உன் தவறு. - *ருமேனிய பழமொழி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii:lk

## தமிழரசுக் கட்சியின் தலைமை தன்னிலை விளக்கம் கொடுக்குமா?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நுண் கடன்களால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவுவதற்காக புலம்பெயர் அமைப்புகள் 21 கோடி ரூபாவை சேகரித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் வழங்கியதாகவும்,

எனினும் அந்த நிதிக்கு நடந்தது என்ன? என்பது பற்றித் தெரியவில்லை என்றும் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் கடந்த 27ஆம் திகதி நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் மேற்போந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட தகவல் இன்றைய பேசுபடு பொருளில் முதன்மையாகியுள்ளது.

இதற்குக் காரணமும் உண்டு.

அதாவது கனடாவில் உள்ள புலம்பெயர் அமைப்புகள் 21 கோடி ரூபாவை சேகரித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் வழங்கியதான தகவலை தமிழரசுக் கட்சிக்கு எதிரான கட்சிகள் தெரிவிக்கவில்லை.

மாறாக தமிழரசுக் கட்சியின் முக்கிய பதவியில் இருக்கக்கூடிய ஒருவரே அந்தத் தகவலை வெளியிட்டுள்ளார் எனும்போது, அது தொடர்பிலான ஆர்வமும் தேடலும் பொதுமக்களிடம் பரவலாக இருக்கவே செய்யும்.

இதற்கு மேலாக, தமிழரசுக் கட்சியிடம் வழங்கப்பட்ட 21 கோடி ரூபாய் என்பது, நுண் கடன்களால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவுவதற்கெனக் கொடுக்கப்பட்டதாயினும் அந்த நிதி மேற்குறித்த தரப்பினருக்கு வழங்கப்படவில்லை. அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் சுமத்திய குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தமிழ் மக்களிடம் பலத்த குழப்பங்களையும் சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் தேர்தல் காலத்தில் இப்படியான குற்றச்சாட்டு வெளியிடப்பட்டுள்ளதால், அது பற்றிய விமர்சனங்கள் காட்டுத்தீயாக மூளவே செய்யும்.

தவிர, குறித்த நிதி பற்றி எந்தத் தகவல்களும் இல்லையெனில், அது தொடர்பில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கவனம் செலுத்தாதது ஏன்? என்ற கேள்விகளும் எழவே செய்யும்.

இவையாவற்றுக்கும் மேலாக இருபத் தொரு கோடி ரூபாய் என்பது சாதாரணமான தொகை அன்று.

அதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட – குடும்பத் தலைவனை இழந்த – நுண்கடன் தொல்லைக்கு ஆளான பெண்களைக் காப்பாற்ற வழங்கப்பட்ட நிதி எனும்போது, அந்த நிதி சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்குக் கிடைக்கவில்லை எனும்போது, அது கண்டு எவரும் ஆத்திரமடையவே செய்வர்.

எனவே தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புச் செயலாளர் கூறிய மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பில் உரிய விளக்கத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை விடுத்தாக வேண்டும்.

அந்த விளக்கத்தில் நிதி கிடைக்கப் பெற்றதா? அவ்வாறு கிடைக்கப் பெற்றால் அதற்கு நடந்தது என்ன? என்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்படுவது மிகவும் அவசியம்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் மாவை சேனாதிராசா அவர்கள் தமது கட்சியின் விளக்கத்தை தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

# எம்.சி.சி.ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதியே இறுதி முடிவு எடுப்பார்

## ஜி.எல்.பீரிஸ். தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கு முன்னர் எம். சி. சி ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கம் இறுதித் தீர்மானத்தை எடுக்கும்.

ஒப்பந்தத்தை கைசாத்திடுவதற்கும், நிராகரிப்பதற்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு அவசியமற்றது.

ஜனாதிபதியே இறுதித் தீர்மானத்தை எடுப்பார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து எம். சி. சி.ஒப்பந்தம் தொடர்பில் இரகசியத் தனமையைப் பேணியது.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒப்பந்தத்தின் முதலிரு பகுதிகள் கைச்சாத்திடப்பட்டு அதற்கான ஆரம்பகட்ட நிதியும் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இவ்விடயங்கள் ஏதும் அக்கால கட்டத்தில் பாராளுமன்றத்திலும், அமைச்சரவையிலும் பேசப்படவில்லை.

எம். சி. சி. ஒப்பந்தம் தொடர்பில் ஆராய மீளாய்வுக் குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த ஜனவரி மாதம் நால்வர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

குழுவினர் மீளாய்வு அறிக்கையை கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்கள். மீளாய்வு அறிக்கையினை மக்கள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டதற்கு இணங்க மீளாய்வு அறிக்கை இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப் பட்டுள்ளது.

எம். சி. சி ஒப்பந்தம் தொடர்பிலான தகவல்களை மறைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஒப்பந்தம் தொடர்பில் உரிய தீர்மானம் எடுக்கப்படும்.

ஒப்பந்தை கைச்சாத்திடவும், நிராகரிக்கவும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு ஒன்றும் அவசியமில்லை.

ஜனாதிபதியே இறுதித் தீர்மானத்தை எடுப்பார் என பீரிஸ் மேலும் தெரிவித்தார். (2)

## டுபாயிலிருந்து 56 மாலுமிகள் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

அவன்கார்ட் கப்பல் நிறுவனத்தில் பணிபுரியும் 51 மாலுமிகள் டுபாயிலிருந்து நேற்று நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் முடிவுகள் வெளியாகும் வரை விமான நிலையத்திற்கு அருகிலுள்ள விடுதியொன்றில் குறித்த நபர்களை தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (2-8)

## அருங்காட்சியகங்களுக்கு செல்ல பதிவு செய்வது அவசியம்

(கொழும்பு)

தேசிய அருங்காட்சியகங்களை ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் திறக்க நட்வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அரச விடுமுறை தினம் அல்லாத ஏனைய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை, அருங்காட்சியகங்களை திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகங்களுகதுச் செல்வதற்கு முன்னர் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, நேரம், திகதியை முன்பதிவு செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலதிக விபரங்களை **www. museum.gov.lk** என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். (2-8)

## க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் மீள்பரிசோதனைக்கான விண்ணப்ப கால எல்லை ஜூலை-17

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய திகதி குறித்த அறிவிப்பை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

அதற்கமைய குறித்த விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைகள் டிசெம்பர் 2ஆம் திகதி முதல் டிசெம்பர் 12 ஆம் திகதி வரை இடம் பெற்றிருந்தன.

இதனையடுத்து, பரீட்சைப் பெறுபேறுகளை கடந்த மார்ச் மாதம் இறுதிப்பகுதியில் வெளியிடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தது.

எனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்த நடவடிக்கைகள் பிற்போடப்பட்டிருந்தன.

அதனைத்தொடர்ந்து, கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி கல்விப் பொதுத தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல; புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது. -காண்டேகர்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மா



சித்தமாகிய குளத்தில் ஓர் அலையேனும் இருக்கும் வரை ஆன்மாவின உண்மை இயல்பை உணர முடியாது. அனைத்து அலைகளும் அடங்காமல் ஆன்மாவின் உண்மை இயல்பை அறியமுடியாது.


எனவே பதஞ்சலி முனிவர் முதலில் இந்த அலைகளைப் பற்றி விளக்கிக் கூறுகிறார். இரண்டாவதாக அவற்றை அடக்குவதற்குரிய மிகச்சிறந்த வழியைக் காட்டுகிறார். மூன்றாவதாக நெருப்பு. நெருப்பை விழுங்குவது. மற்ற எல்லா அலைகளையும் அடக்கும் மிக வலிமையான ஓர் அலை மட்டும் எஞ்சி நிற்கும் போது அதையும் அடக்குவது எளிது.

இந்த ஓர் அலையும் அடக்கப்படும்போது எய்துவது விதை இல்லாத சமாதி. அது எந்தப் பதிவையும் விடுவதில்லை. அங்கே ஆன்மா தன் மகிமையில் மிளிர்கிறது. ஆன்மா ஒரு கலவை அல்ல.

பிரபஞ்சத்தில் உள்ள நித்தியமான தனிப்பொருள் அதுவே என்று அப்போதுதான் அறிகிறோம். ஆன்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. என்றும் உள்ளது. அழிக்க முடியாதது. அதுஆவே என்றென்றும் உள்ளதான அறிவின் சாரம் என்பதை உணர்கிறோம்.

# இராணுவமயமாக்கலினூடாக தமிழர்களை முடக்க நினைக்கிறது கோட்டாபய அரசு

## கூட்டமைப்பின் வேட்பாளர் சிறிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவமயமாக்கல்மூலம் ஜனாதிபதி கோட்டாபய தமிழர்களை முடக்க நினைக்கிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இளைஞர்களுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழர்களாகிய நாம் இந்த மண்ணிலே 70ஆண்டுகளாக எமது உரிமைகளுக்காகப் போராடி வருகிறோம். தந்தை செல்வா தலைமையில் அகிம்சை ரீதியிலும் தலைவர் பிரபாகரன் தலைமையில் ஆயுத ரீதியாகவும் போராடியிருக்கிறோம்.

தமிழர்களை ஆயுத ரீதியாக தோற்கடித்த மமதையில் 3 ஆவது தடவையாகவும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று கனவு கண்ட மகிந்த ராஜபக்ஷவை தமிழர்களே தோற்கடித்தனர்.

அடுத்து வந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ தனிச் சிங்கள பௌத்த வாக்குகளால் வெற்றி பெற்ற மமதையுடன் பாராளுமன்ற தேர்தலில் பிரதான செய்தியாக 19 ஆவது அரசியலமைப்பை அரச தரப்பு நீக்குவதாக கூறிவருகின்றது. 19 ஆவது அரசியலமைப்பை நீக்கினால் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாது போகும்.

அவ்வாறு நீக்கிவிட்டு அரச நிறுவனங்கள் பலவற்றுக்கு தலைவர்களாக ஓய்வு நிலை இராணுவ அதிகாரிகளை நியமித்து இருக்கிறார்கள்.

தமிழர் தேசங்களில் புதிதாக இராணுவச் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. உலகிலேயே கொரோனா வைரஸை தடுப்பதற்காக ஆணையிறவில் ஆயுதங்களை பொருத்திய நாடு இலங்கையே என அவர் மேலும் குறிப்பிட்டார். (2-4)

## மாற்றுத் தலைமை ஒன்று மக்களுக்குத் தேவை இன்று

### சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



(மன்னார்)

புதிய மாற்று அரசியல் தலைமை தேவை என்பதை தமிழ் மக்கள் தற்போது உணர்ந்துள்ளார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த மக்கள் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "மன்னார் மாவட்டத்தில் பல கிராமப்புறங்களில் வாழும் மக்கள், அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் பல இன்னலுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அதாவது நீண்டகாலமாக பாதைகள் திருத்தப்படாமல் இருக்கின்றது. குடிநீர் பிரச்சினை, வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில்தான் இம்மக்கள் நாட்டில் நடைபெறுகின்ற அனைத்து தேர்தலுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

மேலும் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மகிந்தவை தோல்வியடைய செய்து மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தினால், அவர்கள் கூட எந்தவொரு வேலைத்திட்டங்களையும் எமது பகுதியில் முன்னெடுக்கவில்லை என மக்கள் கவலையுடன் கூறுகின்றனர். கடந்த 20 வருட காலமாக ஆதரவு வழங்கி வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீது மக்கள் மனவிரக்கி அடைந்த நிலையில் உள்ளனர். எனவே இம்முறை அவர்களுக்கு வாக்களிக்கப் போவதில்லை என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்கின் றனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## முஸ்லிம் அமைப்பிடமிருந்து பணம் எதுவும் பெறவில்லை

### மைத்திரி மறுப்பு



(கொழும்பு)

முஸ்லிம் அமைப்பு ஒன்றிடமிருந்து 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக முஸ்லிம் லீக் அமைப்பிடமிருந்து 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை மைத்திரிபால சிறிசேன கடந்த ஆட்சிக் காலத்தில் பெற்றுள்ளார் என குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், குறித்த விடயத்தில் எந்தவொரு உண்மையும் இல்லையென மைத்திரி மறுப்பு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, "கடந்த வருடம், உலக முஸ்லிம் லீக்கின் செயலாளர் நாயகம் கலந்துகொண்ட ஒரு நிகழ்வில் நானும் கலந்துகொண்டேன்.

இதன்போது குறித்த நிகழ்வில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவி வழங்குவதற்காக ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முஸ்லிம் அமைப்பு முன்வந்துள்ளது எனக் கூறப்பட்டது. ஆனால் குறித்த நிதி எமக்கு கிடைக்கவில்லை. இதனை உலக முஸ்லிம் லீக் அமைப்பும் தெளிவுபடுத்தியுள்ளது. அத்துடன் அந்த அமைப்பு, சில தகவல்களை கோரியிருந்தது. ஆனால் இலங்கை அதற்கு எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை. இதனால் அந்தப் பணம் எமக்குக் கிடைக்காமல் போனது" என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# இரண்டாம் கட்ட கொரோனா அச்சுறுத்தல்; அரசாங்கம் எந்த வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை

## ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**இரண்டாம் கட்ட கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்தும், இலங்கை அரசாங்கம் இது தொடர்பான எந்தவொரு வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

சிறிகொத்தாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளதாவது, "கொரோனா வைரஸ் தாக்கம் இலங்கையில் ஏற்பட்டபோது, அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை சரியானது என்பதால் நாமும் அதற்கு அன்று ஒத்துழைப்பினை வழங்கினோம். இதனால், நாம் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாக சிலர் எம்மை விமர்சித்தார்கள். நாம் இது தொடர்பாக எல்லாம் கவலையடையப் போவதில்லை. மக்களின் வாழ்க்கை தொடர்பாகத்தான் இவ்வேளையில் சிந்திக்க வேண்டும்.

இன்று உலக சுகாதார ஸ்தாபனம், இரண்டாம் கட்ட கொரோனா அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளது. நாம் இது தொடர்பாக சிந்தித்து, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால், அரசாங்கமானது இதுவரை இது தொடர்பான உரிய வேலைத்திட்டமொன்றை வகுக்கவில்லை. கடந்த காலங்களில் மக்கள் எம்மை புறக்கணித்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

எவ்வாறாயினும், ஜனநாயகத்தை கைவிட்டு, சர்வாதிகாரப் போக்குக்கு நாட்டை கொண்டு செல்ல நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

நாம் அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க தான் பலத்தைக் கோருகிறோமே ஒழிய, கட்சிக் காரியாலயங்களை விமர்சிக்க அல்ல. அத்துடன் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## தேர்தல் அரசி...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தேர்தலிலே கிடைக்கின்ற பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை எமக்கு விடிவு எதனையும் தந்ததும் இல்லை. தரப்போவதும் இல்லை. எமது தெளிவான நிலைப்பாடுகளும் ஒற்றுமையான, துல்லியமான திட்டமிடல்களும் செயற்பாடுகளுமே எமது பயணத்திற்கு வளம் சேர்க்கும்.

ஒவ்வொருவரும் மற்றவரிலே சேறு பூசும் கீழ்த்தரமான அரசியலை விடுத்து தமது நிலைப்பாடுகளையும் திட்டங்களையும் கொள்கைகளையும் முன்வைப்பதிலே தமது சக்தியை செலவிடுவார்களானால் அது ஆரோக்கியமானதாக அமையும். நடக்கவிருக்கும் பொதுத் தேர்தல் மக்கள் முன் போதுமானளவு தெரிவுகள் இருக்கின்றன. எமது மக்கள் ஏனையவர் களுடன் ஒப்பிடும்பொழுது தெளிவான அரசியல் பார்வை கொண்டவர்கள். அவர்களால் சரியான தெரிவுகளை அடையாளப்படுத்த முடியும்.

மரத்தினாலான பிடியை கையகப்படுத்தியே கோடரியானது மரங்களை வெட்டிச் சாய்க்கின்றது. அதுபோலவே எம்மவர்களும் கையகப்படுத்தப்பட்டு அது எமது அழிவுக்கு காரணமாகாமல் பார்த்துக் கொள்வது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

பலர் சூழ் நிலைகளின் அழுத்தங்களினால் அல்லது வேறு காரணங்களினால் தவறாக வழி நடத்தப்பட்டிருக்கலாம். அதற்காக அவர்கள் நம்மவர்கள் அல்ல என்று ஆகிவிடாது. அவர்களுக்கான தெளிவூட்டல்களை தொடர வேண்டிய தேவையிருக்கிறது.

அற்ப சலுகைகளுக்காகவும் பணத்திற்காகவும் பதவிகளுக்காகவும் வெகுமானங்களுக்காகவும் எங்கள் வாக்குரிமையை வீணடிக்கப் போகின்றோமா? அல்லது எமது நீண்டகால அபிலாசைகளை மக்களுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்களுடன் வெளிப்படைத் தன்மையுடனும் முன்னெடுக்கும் வல்லமையும் பிறரால் கையகப்படுத்தப்படாமல் செல்லக்கூடிய திறனும் உடையவர்களைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப் போகின்றோமா? என்பது சம்பந்தமான தெளிவு எமக்கு இருக்குமாயின் எம்மால் சரியான தீர்ப்பை எழுத முடியும்.

தேர்தல் அரசியலுக்காக கட்சிகளுக்குள்ளேயும் கட்சிகளுக்கிடையேயும் மக்களிடையேயும் பகைமையை வளர்க்கும் பேச்சுக்களையும் பதிவுகளையும் தவிர்த்து தேர்தலில் நிற்கும் ஒவ்வொருவரும் தமது நிலைப்பாடுகளையும் திட்டங்களையும் கருத்துக்களையும் முன்வைத்து மக்களின் தீர்ப்புக்காக காத்திருந்து அதை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை வளர்த்துக் கொள்வதே ஆரோக்கியமானதாக அமையும்.

தேர்தலின் பொழுதும் அதன் பின்பும் அரசியல் வேறுபாடுகள் கடந்து எமது அபிலாசைகளை வென்றெடுக்கும் பயணத்திற்காய் ஒன்றிணைவோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கிணற்றை ஆழப்...

உயிரிழந்ததுடன், ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட நேசன் குடியிருப்பு 1ஆம் வட்டாரத்தில் கடும் வறட்சி காரணமாக மக்களின் கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது.

குறித்த பகுதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றினை ஆழப்படுத்துவதற்காக நேற்றுக் காலை கிணற்றுக்குள் இறங்கிய இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் ஒருவர் மாவட்ட மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் புதுக்குடியிருப்பு 1ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த செ.திலகச்செல்வன் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மேலும் ஆ.றதுர்யன் (வயது-24) என்ற இளைஞன் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## வவுனியாவில் ஒரு...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய 300றக்கும் மேற்பட்டோர் வவுனியா பூவரசங்குளம் மற்றும் பம்பைமடு இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மையங்களுக்கு கொண்டு வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் சுகாதார தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்றைய் தினம் பூவரசங்குளம் தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 46 பேருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டன.

பரிசோதனை முடிவுகளின்படி ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,299)

## வவுனியாவில்...

மாட்டம் காணப்படுவதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு சென்ற போதை ஒழிப்புப் பிரிவினர் சிறீ ராமபுரம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனை கைது செய்துள்ளனர்.

அவரிடமிருந்து 170 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட இளைஞனிடம் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,299)

## 108 நாட்களின்...

அறிவித்திருந்தது.

இக்காலப் பகுதியில் பாடசாலைகளை சுத்தம் செய்தல், கிருமி நீக்கம் செய்தல், பாட அட்டவணைகளை திருத்தம் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

பொலிஸார், விசேட அதிரடிப் படையின் கிருமித்தொற்று நீக்கி விசுறும் அணியினர் சகல பாடசாலைகளிலும் கிருமித் தொற்று நீக்கி விசுறும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம-3)

## தமிழருக்கு...

முஸ்லிம் மக்களை பாதுகாக்கவும், அவர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கவும், விடுதலைப் புலிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கையினை எடுத்தோம். யுத்தம் புரிந்தது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மாத்திரமே தவிர தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல. பயங்கரவாதத்துக்கு எதிராகவே போராட்டம் இடம்பெற்றது.

அதனைத் தாண்டி ஒரு இனத்தை இலக்காகக் கொண்டு போர் செய்யவில்லை. தற்போது சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் எம்முடன் இணையுங்கள். சந்தேகம் கொள்ள வேண்டாம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட நிலைமைகள் யாவரும் அறிந்ததே. ஐந்து வருடங்களாக அபிவிருத்தி வீழ்ச்சியடைந்தது. இதனால் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டார்கள். ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பட்டுக் கொண்டமையினால் முழு அரசாங்கமும் பலவீனமடைந்தது. இவ்வாறான நிலை மீண்டும் தோற்றம் பெறக்கூடாது. நாட்டின் ஜனாதிபதியின் கொள்கையை செயற்படுத்த பிரதமர், அமைச்சரவை தயாராக இருக்க வேண்டும் என்றார். (ம-3)

## வடமராட்சியில்...

யத்திற்கு அருகாமையில் யுவதி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று வரும் குறித்த மாணவி கடந்த வெள்ளிக்கிழமை விபரீத முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த இராஜேஸ்வரன் ஜனனிகா (வயது-20) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-3,60)

## தேர்தல்கள்...

ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பான பல்வேறு முக்கிய காரணிகள் குறித்து ஆராய்வதற்காக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு அதன் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது. ஆணைக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏனைய முக்கிய அதிகாரிகளுடன் இன்று காலை 10 மணியளவில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் விசேடமாக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களின் வருகை மற்றும் வாக்களிப்பு நேரத்தை அதிகரிப்பது குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்படும்.

வாக்களிப்பதற்கான நேரத்தை அதிகரிப்பது குறித்து தேர்தல் சட்ட விதிமுறைகள் மீறல், வன்முறைகள், வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் குறித்தும் இன்றைய கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ம-3)

## அரசு வேறு எதை...

அரசாங்கம் வேறெதையும் செய்யவிலலை.

இறுதியாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற் கும், பொருளாதாரததை சீரமைப்பதற்கும் இராணுவ அதிகாரிகளை நியமிப்பது மாத்திரமே எஞ்சியிருக்கிறது.

இந்நிலை தொடருமாக இருந்தால் அரச நிர்வாக சேவைப் பரீட்சை எழுதித் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் போய்விடும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார சுட்டிக் காட்டினார். (ம-3)


மெகா பவர்
திகதி 29/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 538
F 07 04 30 32 51

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2463
P 39 45 66 75

மஹஜன சம்பத
திகதி 2020/06/29
சீட்டிழுப்பு இலக்கம் 4169
A 9 4 1 1 6 1

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1591 திகதி 2020/06/29
X 01 23 29 38

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1167
சீட்டிழுப்பு திகதி 29.06.2020 ஊதா
P 15 27 37 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,692,392

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 965
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.06.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,160,525/-
31 39 74 75 G

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3331 திகதி: 2020.06.29
10 15 30 68 C
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 31,483,121/-

ராசி
வெற்றி வாரம் 2846 வர்ணம் மஞ்சள் திகதி 29.06.2020
17 18 27 32 தனுசு
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 3,671,976
Web: www.dlb.lk

# வடக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பில்

## ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் பிரதமர் மகிந்தவுடன் கலந்துரையாடல்



(கொழும்பு)

வடக்கு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பில் வடக்கு ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் பிரதமர் மகிந்த ராஜபக்சவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் வடமாகாண வடக்கு ஆளுநர் திருமதி பி.எஸ்.எம சார்ள்ஸ் ஆகியோருக்கிடையில் சந்திபபொன்று இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பு நேற்று முற்பகல் அலரிமாளிகையில் இடம்பெற்றதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை கொரோனா தடுப்பு முடக்க செயற்பாடுகளின் பின்னர் வடக்கில் மக்களின் இயல்பு வாழ்க்கையினை வழமைக்கு கொண்டு வருதல் மற்றும் சட்ட விரோதமாக இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக நாட்டிற்குள் பிரவேசிப்பவர்களை தடுத்து நிறுத்துவது தொடர்பிலும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கில் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னெடுக்க வேணடிய எதிர்கால நடவடிக் கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது. (ம-3,8)

# வெவ்வேறு பிரதேசங்களில் வாள்வெட்டு மற்றும் மோதல் 5 பேர் படுகாயம்

வவுனியா

வவுனியாவில் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் மோதல் சம்பவங்களில் ஐந்து பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மகாறம்பைக்குளம், பூந் தோட்டம், சிறிநகர் போன்ற பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை குறித்த மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

# போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட வீதிச் சோதனையில்

## 46 நபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் கடந்த வாரம் யாழ். போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட வீதிச் சோதனை நடவடிக்கைகளின்போது மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 46 நபர்களின் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில முற்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3,32)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர், நல்லூர், கச்சேரியை அண்மித்த பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு : (3148)
077 267 6453

## ஆட்டோ வாடகைக்கு

கம்பனிகள், தனியார் நிறுவனங்களுக்கு சாரதி உட்பட மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு : (3142)
077 346 8072

## காணி விற்பனைக்கு

அராலி மேற்குப் பகுதியில் 10 1/2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : (3149)
077 663 1742

## பகிரங்க ஏல விற்பனை

வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனைக்குத் தீர்மானிக்கப்பட்ட பொருட்கள் 14.07.2020ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணிக்கு பாடசாலையில் ஏல விற்பனை நடைபெறவுள்ளது. பொருள் விபரம் பாடசாலை நேரத்தில் அதிபர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (3144)

அதிபர்
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

# யாழ்.வலய அதிபர்களுக்கான விசேட கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வலய கல்விப பணிப்பாளர் செ.சந்திரராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# கல்வி நடவடிக்கைகள் ஜூலை 6 இல் ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் தொடங்கியவுடன் மணி ஒலிக்கும் ஓசை நாட்டின் ஆரோக்கியத்திற்கு ஒரு தெளிவான சமிக்ஞை என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (ம-3)

## கண்ணீர் அஞ்சலி



29.06.2020 அன்று காலமாகிய எமது பாடசாலை ஆசிரியை திருமதி. தர்சினி சற்சொருபன் அவர்களின் தாயார்

திருமதி
திரவியம் தேவமங்களநாதன்

அவர்களின் ஆன்மா ஈடேற்றம் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (3146)

பாடசாலைச் சமூகம்
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் உள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. (3152)

குறிப்பு : கணக்குப் பார்க்கத் தெரிந்திருக்க வேண்டும்.

T.P : 077 275 9799

## சதா பொன்ஸ்

கல்வி நிலையம்
மாலி சந்தி, அல்வாய்

O/L DAY CLASS
ஆரம்பம் 01.07.2020
புதன் காலை 7.30 மணி (C-9784)

T.P : 077 309 5176

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

## பராமரிப்பும் சுகப்படுத்தலும்

உங்கள் வயோதிப நோயாளர்களை வீட்டில் வைத்துப் பராமரிப்பதில் கஷ்டப்படுகிறீர்களா? உங்கள் உறவுகள் எங்கள் இடத்தில் வைத்து உரிய முறையில் பராமரிக்கப்படுவர். (3151)

தொடர்பு : 077 873 0129

## இலங்கை விசா நீடிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT

எமது கிளைகள்
யாழ்ப்பாணம், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, மருதங்கேணி, சாவகச்சேரி, மானிப்பாய், கிளிநொச்சி, கொடிகாமம், சுன்னாகம், பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை



V2 TRAVELS 0768227499 (C-9624)

## கடை வாடகைக்கு

நெல்லியடியில் இருந்து கொடிகாமத்திற்கு செல்லும் கொடிகாம வீதியில் நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில் 2 கடைகள் வாடகைக்கு உண்டு. (3147)

தொடர்பு : 021 226 3208 , 077 309 0854

## வடமாகாணத்தின் முதன்மை ஆசிரியர்களால் தொகுக்கப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சை புலமைத் தேடல் மாதிரி வினாத்தாள் - 2020

தரம் - 05



மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாளினை இலங்கையின் அனைத்துப் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களுக்கு விசேட விலைக்கழிவு (C-9791)

மேலதிக விபரங்களுக்கு - 077 681 8947



## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்

மஹா கும்பாபிஷேக தின விழா - 2020

காரைநகர் பலகாடு ( இராஜபுரம் ) சப்த கன்னிகள் எனவும் நாச்சிமார் கோயில் எனவும் அழைக்கப்படும் திருவருள் சக்திமிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக தின விழா நவோத்திர சகஸ்ர ( 1008 ) சங்காபிஷேக விஞ்ஞாபனம் சார்வரி வருடம் 2020, 02.07.2020 வியாழன் ( அனுச நட்சத்திரம் ) காலை 07 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் விஷேட பூஜை நடைபெறும். மாலை 04 மணிக்கு வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி திருவூஞ்சல் நடைபெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (C-9798)

பலகாடு ( இராஜபுரம் ) காரைநகர்.
077 722 5310 S. கணேசமூர்த்தி.
இங்ஙனம் ஆலய தர்மகர்த்தாவும் பரிபாலன சபையினரும்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.